

381. போய் வாருமையா, தூதரே!

வால்மீகி சொல்வது

'வாயுபுத்திரனான ஆஞ்சனேயன் மலை போன்ற உடம்புடன் எவராலும் தாண்டக் கூடாத கடலைத் தாண்டி அக்கரை சேர்ந்து, ராமனையும் வானரர்களையும் உத்தேசித்துச் செயற்கருஞ் செயல்கள் செய்ய விரும்புகிறான்' என்ற செய்தியைப் பரப்பினார்களாம், நிர்மலமான வானத்தில் நின்று கொண்டிருக்கும் சித்தர்களும் சாரணர்களும் முனிவர்களும். அது கேட்டு வித்தியாதரர்கள் மகேந்திர மலையில் ஒப்பற்ற ஆற்றலுடன் நிற்கும் அனுமனைப் பார்த்தார்கள்.

அனுமனோ மலைமேல் மலை குலுங்குவது போல அசைந்து, ரோமம் சிலிர்க்க, மேக கர்ஜனை போல் கர்ஜித்தான். ரோமம் அடர்ந்த நீண்ட வாலைக் கருடன் பாம்பைச் சுழற்றுவதுபோல் சுழற்றி உதறினான். மேலெழும்ப எண்ணங் கொண்டு அதற்கு வேண்டிய வேகத்தை மேற்கொள்ளுமாறு அப்படி வாலை உதறி இழுத்துக் கொண்டான். கைகளைப் பூமியில் பலமாக ஊன்றி இடுப்பைச் சுருக்கிக் கால்களை மடக்கித் தோள்களையும் கழுத்தையும் வளைத்து, ஆண்மையையும் தேஜஸையும் அப்படி விருத்தி செய்து கொண்டான்.



வெகு தூரம் வரையில் தான் போகும் வான வழியை நிமிர்ந்து உற்றுப் பார்த்துக் கொண்டான். பிராண வாயுக்களை இருதயத்தில் அடக்கிக் கொண்டான். கால்களை உறுதியாக ஊன்றிக் காதுகளை மடக்கிக் கொண்டு வானத்தில் தாவப் போகிறான்.

அச்சமயம் வானர சிரேஷ்டன் மற்ற வானர வீரர்களை நோக்கி, 'ராம பாணம் எப்படிப் போகுமோ அப்படிப் போவேன் தடையில்லாமல். இலங்கையில் ஜானகியைக் காணாவிட்டால் அதே வேகத்துடன் வானுலகம் செல்வேன். அங்கும் காணாவிட்டால், சிறிதும் சிரமம் இல்லாமல் ராவணனைப் பிடித்துக் கட்டி இங்கே கொண்டு வருவேன். எப்படியாவது காரிய

சித்தி பெற்றுச் சீதையுடன் திரும்புவேன். இல்லாவிட்டால், ராவணனுடன் இலங்கையையும் பெயர்த்துக் கொண்டு வருவேன்' என்றெல்லாம் தைரியம் சொல்லுகிறான். பிறகு மனக் கவலையின்றி அதிவேகமாய்க் கிளம்புகிறான். தன்னை இப்போது கருடனுக்குச் சமமாகவே நினைத்துக்கொண்டு விசையாக மேலே பாய்கிறான்.

இப்படி வர்ணிக்கப்படுகிறது வால்மீகி முனிவரால், அனுமன் கடல் தாவிச் செல்ல வேண்டுமென்று வானத்திலே பாயும் காட்சி. இனி, நாம் இச் சந்தர்ப்பத்தைக் கம்பன் எப்படி வர்ணிக்கிறானென்று பார்க்கலாம்.

கம்பன் காட்சி (ஒரு விழா)

லட்சியமே கண்ணாகப் பயங்கரமான அபாய முயற்சியில் தலையிடும் அனுமன் மலையிலே பல வகைக் குழப்பங்களுக்குக் காரணமாகிறானல்லவா? இந்நிகழ்ச்சிகளே, அனுமன் கடல் கடக்குமாறு விரைகின்றான் என்ற செய்தியை மூன்று லோகங்களிலும் அறிவித்து விடுகின்றன.

உடனே பெரியோர்களும் முனிவர்களும் தேவர்களும் விரைந்து வந்து வானத்தில் அங்குமிங்கும் முறைமுறையாக மொய்த்தவர்களாய் அனுமனை நோக்கி உத்ஸாகப் படுத்துகிறார்கள். அவர்கள் கொத்துக் கொத்தாகப் பூக்களையும், சந்தனம் வாசனைப் பொடி இரத்தினங்கள் ஆகியவற்றையும் அனுமன்மீது வாரிச் சொரிகிறார்கள். சொரிந்து 'போய் வாருமையா ராம தூதரே!' என்று வாழ்த்தி விடை கொடுக்கிறார்கள்.

இந்த உல்லாசக் கிளர்ச்சிகளெல்லாம் அனுமனுடைய உள்ளத்திலுள்ள உத்ஸாகத்தை மேலும் மூட்டி விரைவு கொள்ளச் செய்கின்றனவாம்:

இத்திறம் நிகழும்
  வேலை, இமையவர்
முனிவர் மற்றை
முத்திறத் துலகத்
  தாரும் முறைமுறை
  விரைவின் மொய்த்தார்,
தொத்துறு மலரும்
  சாந்தும் சுண்ணமும்
  மணியும் தூவி,
'வித்தக! சேறி'
  என்றார்; வீரனும்
  விரைவ தானான்.

[இத்திறம் — இவ்வாறாக. நிகழும் வேலை — பலவகைக் குழப்பங்கள் நிகழ்ந்த சமயத்திலே. இமையவர் — தேவர்கள். மற்றை முத்திறத்து உலகத்தாரும் — மற்றும் மூவுலகத்திலுள்ள பெரியோர்களும். முறை முறை — அவரவர் தகுதிக்குத் தகுந்தபடி வரிசை வரிசையாக. விரைவின் மொய்த்தார் — விரைவாக வந்து அனுமனைச் சூழ்ந்து மொய்த்துக் கொண்டவர்களாய். தொத்து உறு மலரும் — கொத்துக் கொத்தாக உள்ள பூக்களையும். சாந்தும்— சந்தனத்தையும். சுண்ணமும் — வாசனைச் சூர்ணங்கள் அல்லது வாசனைப் பொடிகளையும். மணியும் — இரத்தினங்களையும். வித்தக — வல்லவனே. சேறி— சென்று வருவாயாக. விரைவதானான்— கடல் தாவிச் செல்லுமாறு உள்ளத்திலே விரைவு கொள்பவனானான்.]

சுவாமி புறப்பாடு என்றால் ஒரு விழாவாய், ஒரு சிறப்பான சடங்குக் காட்சியாய்க் கொண்டாடப் பெறுகிறதல்லவா? அந்த மாதிரி அனுமன் புறப்பாடும் பெரு மகிழ்ச்சிக்குரிய அழகிய திருவிழாக் காட்சியாகி விடுகிறது.

மலைபோன்ற மௌன ஸங்கல்பம்

இப்படி உத்ஸாகம் மூட்டப்பெறும் அனுமன் இப்போது நிற்கும் நிலையையும், அந்த அபாரமான தன்னம்பிக்கையையும் என்னென்பது?

'இந்தக் கடல் குறுமுனிவன் (அகஸ்தியன்) குடித்ததுதானே! இதைத் தாண்டுவதும் ஒரு பெருமையா, திறமையா?' என்று அப்பேருருவம் இகழ்ந்து நோக்குவதுபோலத் தோன்று



கிறதாம், தோழர் கண்களுக்கு. இது தன்னம்பிக்கை மட்டுமா?—தன்னம்பிக்கையின் அக்கரை கண்டு அப்பாலும் அதீதமாகச் செல்லும் மனநிலை போலக் காண்கிறது, ஜாம்பவான் முதலியவர்களுக்கு.

ஆகவே அவர்கள் நட்புரிமையுடன் ஓர் எச்சரிக்கை செய்கிறார்களாம். 'நீ அப்படி அலட்சியம் செய்து விடலாகாது. கடல் தாண்டுவது உனக்குப் பெரிதல்ல என்றாலும் ராம காரியம் பெரிதல்லவா? கருத்துடன் சென்று காரியத்தைப் பார்' என்கிறார்கள்.

இந்த எச்சரிக்கையையும் நல்லதென்று பயன்படுத்திக் கொண்டு ஜாக்கிரதையாகக் காரியசித்தி பெற்று மீள வேண்டும் என்று ஸங்கல்பம் செய்து கொள்கிறது மலை போன்ற உருவம்:

'குறுமுனி குடித்த
வேலை குப்புறும்
கொள்கைத் தாதல்

வெறுவிது; விசயம்
வைகும் விலங்கல்–தோள்
அலங்கல் விர!

சிறி(து) இதென்(று) இகழற்-
பாலே அல்லே, நீ
சேறி' என்னு,
உறுவலித் துணைவர்
சொன்னர்; ஒருப்பட்டான்
பொருப்பை ஒப்பான்.

[குறுமுனி — குறுகிய வடிவமுள்ள அகஸ்திய முனிவர். வேலே — சமுத்திரம். குப்புறும்—கடக்கவேண்டிய. கொள்கைத்து ஆதல் — கொள்கை அல்லது லட்சியத்திற்கு இலக்காயிருப்பது. வெறுவிது — மிகவும் பயனற்றது. விசயம் வைகும்—வெற்றி தங்கிய. விலங்கல் தோள் அலங்கல் வீர — மலே போன்ற தோள்களேயும், அத்தோள்களில் அசைந்தாடும் மாலேயையும் உடைய வீரனே. சிறிது இது என்று — கடல் தாவும் இச் செயல் நமது திறத்துக்குச் சிறியதுதானே என்று. இகழற்பாலே அல்லே — இகழத் தகாதவனும்; (அதாவது) அலட்சியமாக நினேயாமல். சேறி— செல்வாயாக. என்னு — என்று. ஒருப்பட்டான் — உடன்பட்டான். பொருப்பை ஒப்பான் — மலேயை ஒத்த அனுமன்.]

அனுமனுடைய இந்த உடன்பாடும் ஸங்கல்பமும் ஒரு மௌன நிகழ்ச்சிதான். இயற்கையின் பெரிய பெரிய காரியங்களெல்லாம் எவ்வளவு மௌனமாக நடைபெறுகின்றன! சூரியன் எத்தகைய மௌன ஸங்கல்பத்துடன் லோக பரிபாலனம் செய்து வருகிறன்! சூரியனிடம் இந்தப் பாடத்தையும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் உயர்திரு. நவவியாகரண பண்டித அனுமன்! சொற் செல்வம் போல் மௌனமும் கம்ப அனுமனது பெருஞ்செல்வம்.

கருமமே கண்

அனுமன் மகத்தான மௌன ஸங்கல்பம் செய்ய, வான வீதியிலோ தேவர்களுக்குள்ளே ஒரு ருசிகரமான விவாதம் 'இந்த உருவத்தையும் தோற்றத்தையும் பார்த்தால், இலங்கை வரையில்தான் போவான் என்று சொல்வதற்கும் இடமில்லேயே!' என்கிறர் சிலர். 'அப்பாலும் போய் வேறு எங்கேயாவது தொப்பென்று குதித்து விடுவானே?' என்ற கவலேதானே?

வேறு சில தேவர்களோ, 'அப்படி ஒன்றும் விலகிப் போய்விடமாட்டான்; கணக்காகப்போய்க் குறித்த வரையிலே தவருது குதித்து விடுவான். இந்த நவ வியாகரண பண்டிதன் பொல்லாத கணித பண்டிதனுங்கூட!' என்று எதிர் வாதஞ் செய்கிறர்களாம்.

இப்படி யெல்லாம் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறும் போதே, மலே போன்ற உருவம் மலேயை அழுத்திக் கொண்டு படுவேகமாக மேலே கிளம்பப் போகிறது:

'இலங்கையின் அளவிற்(று)
அன்றல், இவ்வுரு
எடுத்த தோற்றம்;

விலங்கவும் உள(து)!' 'அன்(று)!'
என்று விண்ணவர்
வியந்து நோக்க,

அலங்கல்தாழ் மார்பம்
முன்தாழ்த்(து), அடித்துணே
அழுத்த லோடும்,

பொலங்கெழு மலேயும்
தாளும் பூதலம்
புக்க மாதோ!

[இலங்கையின் அளவிற்று—இலங்கை வரையில் மாத்திரம் போவதற்கு அன்று. விலங்கவும் — விலகவும். அன்று — விலகிப்போக அன்று, கணக்காய்க் குறித்த வரையில் போகத்தான். விண்ணவர் — தேவர்கள். அலங்கல் — மாலே. தாழ் — தொங்கப் பெற்ற. மார்பம் — மார்பு. முன் தாழ்த்து — முன்புறம் சாய்த்து. அடித்துணே — தன் இரண்டு கால்களும். பொலம் கெழு — பொன்மயமாக ஒளிர்கின்ற. தாளும் — கால்களும். பூதலம் புக்க — பூமியில் புதைந்தன.]

அடுத்த வாரம்; வால்மீகிக்கும், கம்பனுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளேக் கூர்ந்து நோக்கி மேலே செல்வோம்.



382. கடல் தாவும் கலை

மலையும் மலைபோன்ற கால்களும் பூமியில் புதைந்தன என்று தோன்றுகிறது ஒரு கணம். அடுத்த கணமே அந்தக் கால்களும் பேருருவமும் விசை கொண்டு மேலெழும்புகின்றன, மாலையும் கழுத்துமாக.

கிளம்பப் போகிறான்

இந்த மாலையை இந்திரன் அனுமனுக்கு இளமையில் வரமளித்தபோது அளித்ததாய்க் கூறுவதுண்டு. ஆனால் அந்தப் பொற்றாமரை மலர் மாலைதான் இது என்று கருதவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றுமில்லை.

இம் மாலையை அனுமன் கழுத்திலே ஒரு வானரனோ, வானவனோ வியந்து சூட்டியதாக ஊகிப்பது மிகையாகாது. பெரியோர்கள் மலரும் சாந்தும் சுண்ணமும் மணியும் தூவிக் குதூகலப்படுத்த, ஒரு வானரத் தோழன் 'தூது வெற்றியோடு மீளவேணும்' என்பதற்கு அறிகுறியாக ஆசையோடும் அன்போடும் ஒரு மாலையைக் கழுத்திலே போட்டிருக்கிறான் என்றால் இதுவும் பொருத்தம் தானே ?

இனி இந்த மாலையே வெற்றி மாலை போலக் கழுத்திலே அசைந்தாடி மார்பிலே புரள, அந்த மார்பை முன்புறமாகச் சாய்த்து ஒடுக்கி அனுமன் மேலே கிளம்பும் வீர சௌந்தரியத்தைப் பார்ப்போம். தோள்கள் எப்படிப் பூரிக்கும்படி கழுத்தைச் சுருக்கியிருக்கிறான் !

அதிசயப் பாய்ச்சல்

வாலை உயரத் தூக்கிக் கால்களை மடக்கி, இரண்டு கைகளையும் பாய்ச்சலுக்கு உதவியாக முன்னே நீட்டிக் கொண்டு மேலே பாய்ந்து விடுகிறானும் படுவேகமாக :

வால்விசைத்(து) எடுத்து,
வன்றாள் மடக்கி,மார்(பு)
ஒடுக்கி, மானத்
தோள்விசைத் துணைகள்
பொங்கக் கழுத்தினைச்
சுருக்கித் தாண்டிக்
கால்விசைத் தடக்கை
நீட்டிக், கட்புலம்
கதுவா வண்ணம்
மேல்விசைத்(து) எழுந்தான்,
உச்சி விரிஞ்சனூ(டு)
உரிஞ்ச வீரன்.

[விசைத்து எடுத்து — விசையாக உயரத் தூக்கி. வன்றாள் — வல்தாள்; வலிமையுள்ள கால்கள். மானத்தோள் விசைத் துணைகள் — பெரிய விரைவுள்ள இரு தோள்கள். பொங்க — பூரித்து உயர. தூண்டி — பாய்வதற்கு உதவியாகத் தூண்டி. கால்விசைத் தடக்கை — காற்றின் விசையுள்ள பெரிய கைகள். கட்புலம் — கண்கள். கதவா வண்ணம்— பற்ற முடியாதவாறு. மேல் விசைத்து எழுந்தான் — வேகங் கொண்டு மேலே எழும்பினான். உச்சி — தலையுச்சி. விரிஞ்சனூடு — பிரம்ம லோகம். உரிஞ்ச — உராய; உரச.]

'தலையுச்சி பிரம்மலோகத்திலே முட்டி விட்டது!' என்று சொல்லும்படி அவ்வளவு உயரமாக எழும்பி, அப்படியே இலங்கையைக் குறியாகக் கொண்டு சாய்வாக இறங்கிவிட வேண்டும் என்பது திட்டம் போலும்! இத் திட்டத்தை வால்மீகியில் அனுமனின் போக்குடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

வாலைச் சுழற்றி உதறிக் கொண்டு கைகளைப் பூமியில் பலமாய் ஊன்றி இடுப்பைச் சுருக்கிக் கால்களை மடக்கிப் புஜங்களையும் கழுத்தையும் வளைத்து, தான் போகும் நீண்ட வழியை நிமிர்ந்து நோக்கிப் பிராணாயாமம் செய்துகொள்கிறான் ஆதிகாவியத்திலே அனுமன். பிறகு கால்களை உறுதியாய் ஊன்றிக் காதுகளை மடக்கிக் கொண்டு அதிவேகமாய்க் கிளம்பி விடுகிறான், தன்னைக் கருடனுக்குச் சமமாக நினைத்துக் கொண்டு.

இத்தகைய மனோபாவத்திலே ஒரு திட்டத்தையும் வகுத்துக் காட்டுவது போலிருக்கிறது கம்பன் கலை. இத்தகைய இதிகாச மனோபாவமே தேவையில்லை என்று கருதுவோரும் உண்டு. இது குறித்துக் கட்டுரையின் இறுதியில் பிரஸ்தாபிப்போம்.

வானத்திலே காடு

இனி, நாம் கடல் கடக்க மேலெழுந்த அனுமனைத் தணிந்து நோக்கலாம். கவிஞர்களின் மனோபாவ விண்ணிலே பாய்ந்து போகிறவன் தானே? கவிஞனே மனோபாவக் குதிரையின் லகானையே விட்டு விடுகிறானோ என்று கூடத் தோன்றுகிறது.

பாருங்கள் அதோ அனுமன் செல்லும் வேகத்திலே மலையிலிருந்து மரங்கள் முதலியனவும் உடன் எழுந்து செல்வதை:

ஆயவன் எழுத
லோடும், அரும்பணை
மரங்கள் தாமும்

வேய்உயர் குன்றும்
வென்றி வேழமும்
பிறவும் எல்லாம்,

நாயகன் பணிஇ-
தென்னா, நளிர்கடல்
இலங்கை தாமும்

பாய்வன என்ன,
வானம் படர்ந்தன,
பழுவ மான!

[ஆயவன் — அப்படிக் கிளம்பிய அனுமன். அரும்பணை மரங்கள் — அருமையான பருத்த கிளைகளையுடைய மரங்கள். வேய் உயர் குன்றம் — மூங்கில்கள் உயர்ந்து வளரப் பெற்ற குன்றின் சிற்சில பகுதிகளும், அதாவது பெருங்கற்களும். வென்றி வேழமும் — அம் மலையில் வாழ்கிற, வெற்றி தரும், யானைகளும். பிறவும் எல்லாம் — மற்றும் உள்ள பொருள்களும் ஆகிய இவை எல்லாம். நாயகன் பணி இது என்னா — இப்படிக் கடல் கடந்து இலங்கைக்குப் போவது நம் தலைவனாகிய ராமபிரானது கட்டளை என்று நம்பி. நளிர் கடல் இலங்கை — குளிர்ந்த கடல் சூழ்ந்துள்ள இலங்கை நோக்கி. தாமும் பாய்வன என்ன — தாமும் பாய்ந்து செல்கின்றன என்று சொல்லும்படி. வானம் படர்ந்தன, பழுவமான — வானத்திலே படர்ந்து கிடக்கும் காடு போலத் தோன்றின ஒரு கணம்.]

அனுமன் பாய்ந்து சென்ற விசையிலே மரங்களும் பாறுங்கற்களும் யானை முதலிய பிராணிகளும் உடன் இழுக்கப்பட்டு வானத்திலே ஒரு கணம்



படர்ந்து கிடந்த காட்சியை மனக் கண்ணால் காண்கிறான் கவிஞன். வேகமாய் ஓடும் குதிரைகள் பூட்டிய இரதத்தைத் தொடர்ந்து தும்பு தூசிகள் செல்வதைக் கண்ணால் கண்டவன் தானே ?

நாட்டுப்புற ரஸ்தாக்களிலே வேகமாய் ஓடும் மோட்டார் வண்டிக்குப் பின்னே தூசி ஒரு படலமாய்ப் படர்ந்து போவதை நாமும் பார்த்திருக்கிறோம். நம் மனோபாவத்தைக் கொண்டு 'ஒரே தூசிக்காடாய்த் தெரிகிறதே' என்று சொல்லியுமிருக்கிறோம், இந்தப் பகுத்தறிவு-யுகத்திலும்.

இப்படியே கம்பனும் கண்ணால் கண்டான், மனக் கண்ணாலும் கண்டான், அனுமன் விசையாகப் போன திசையிலே தூசி தும்புகள் போலத் தொடர்ந்து போன மரங்கள் மலைக் கற்கள் முதலியவற்றையும். தான் கண்ட காட்சித் தெளிவிலே, 'அடடா, இம் மரங்கள் முதலியன மலையை விட்டு வானத்திலே படர்ந்து கிடக்கும் ஒரு காடு போலக் காண்கின்றனவே!' என்று அதிசயமாய்க் கண்டு காட்டுகிறான்.

ப்டுவேக ராமாயணமா ?

இந்த அதிசயம் ஒரு கணம் தான். அடுத்த கணமே அடுத்த அதிசயம் தோன்றுகிறது. 'ஆஹா, சேதுபந்த

னமே ஆகிவிட்டதோ?' எனத் தோன்றுகிறதாம்:

மாவொடு மரனும்
  கல்லும் வல்லியும்
    யாவும் மற்றும்,
போவது புரிந்த
  விரன் விசையினுல்,
    புணரி போர்ப்பத்
தூவின, கீழும்
  மேலும் தூர்த்தன,
    சுடுதீ அன்ன
சேவகன் சீரு
  முன்னம் சேதுவும்
    தெரிந்த மாதோ!

[மாவொடு — மிருகங்களோடு. மரனும் — மரங்களும். வல்லியும் — காட்டுக் கொடிகளும். மற்றும் யாவும் — மற்றுமுள்ள மலைக்காட்டுப் பொருள்களும். புணரி போர்ப்ப — கடலைப் போர்த்து விட்டன என்ற சொல்லும் படி. சுடுதீ அன்ன — சுடுகின்ற தீயைப் போல் ஜொலிக்கும். சேவகன் — வீரன். சீரு முன்னம் — சீறுவதற்கு முன்பே.]

அனுமன் போன விசையிலே அவனைத் தொடர்ந்த மலைக் கற்கள் மரங்கள் முதலியன அந்த விசையின் இழுப்புச் சக்தியை இழந்து, அப்படி அப்படிப் போய்ப் போய் அங்கங்கே இந்தத் தெற்கு மாகடலில் விழுந்து விடுகின்றனவாம்.

அவை கடலைப் போர்த்து விழுந்த காட்சியே ஒரு சேதுபந்தனக் காட்சி போலத் தெரிகிறதாம், 'ராமன் சேதுபந்தனம் செய்வதற்கு முன்னமே ஒரு சேதுபந்தனம் ஆகிவிட்டதோ!' என்று பிரமிக்கும்படி.

தீக்கடவுளின் அஸ்திரத்தால் (அக்கினி அஸ்திரமாகிய ஆக்நேயாஸ்திரத்தால்) ராமன் கடலை எரிக்க முயன்று சேதுபந்தனம் செய்யப் போகிறான் என்பது ராமாயண கதை. இங்கே கம்பன் ராமனையே 'சுடு தீ' ஆக்கி விடுகிறான்.

இப்படி யெல்லாம் வருணிக்கும் கம்பன், மில்ட்டன் போன்ற இதிகாச மகா கவிகளை அளக்க நம் பகுத்தறிவுச் சிறு கெஜக்கோல் போதுமா?

வானளவும் அங்கங்கள்,
  வானரங்கள், ராமர்கள்
ஆனது செய்யும்
  அனுமார்கள் சாம்பவந்தர்...
உள்ள பகுத்தறிவுக்(கு)
  ஒவ்வாத ஏடுகளால்
எள்ளை அசைக்க
  இயலாது

என்றெல்லாம் பரிகசிப்போர் பரிகசிக்கட்டும்.

ஆனுல் உலக ரட்சகர்களில் ஒருவரான கிறிஸ்துபெருமான் சொன்னதென்ன? 'கடுகளவு நம்பிக்கை உங்களுக்கு இருந்து நீங்கள் இம் மலையைப் பார்த்து, "நீ கடலில் போய் விழுந்து விடு!" என்றால் அப்படியே நடக்கும்!' இதே கொள்கையை அப்பர் சுவாமிகளும் வெளியிடுகிறார்:

கற்றுணைப் பூட்டிஓர்
  கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது
  நமச்சி வாயவே!

மலையைப் பெயர்த்துக் கடலிலே போட்டு விடும் மகாவிசுவாசம் என்கிறாரே கிறிஸ்துநாதர், அந்த மகத்தான— ஆத்ம சக்தி அளிக்கும் — உண்மைக்குத் தான் கதையுருவம், அனுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தாவிப் பெயர்த்து வந்ததெல்லாம்!

மகாவிசுவாசம் மலையை மட்டுமா, உலகத்தையே அசைத்து விடும்—என், புரட்சி செய்து திருத்திவிடும்—என்பது 'பூரணமா ஞானப் புகழ்விளக்கை நாட்டுவித்த' தீர்க்கதரிசிகளான மகான்களும் மகா கவிகளும் கண்ட உண்மை. காந்தி மகான் போன்ற கர்ம வீரர்களும் கண்டு கொண்ட உண்மைதான்.

வாழ்வைப் பெரு வாழ்வாகச் செய்து கொள்ளப் பகுத்தறிவு மட்டும் போதுமா? எந்த இடையூற்றுக் கடல்களையும் தாவிச் செல்ல வல்ல நம்பிக்கையோடு கூடிய மனோபாவம் தேவை. இது கடல்தாவு படலத்தின் உட்பொருள்.
—கடல் தாவும் கலை.



383. மனோவேக யாத்திரை

அனுமன் புறப்பட்ட வேகத்திலே மலையிலுள்ள மரங்கள் முதலியன மேலெழுந்து அனுமனைக் கொஞ்ச தூரம் பின் தொடர்ந்து கீழே விழுந்தன என்று சென்ற வாரம் குறிப்பிட்டோம். அந்தத் தோற்றம், ஒரு கணம் வானத்திலே ஒரு காடாயிற்று ; அடுத்த கணமே தென் கடலில் சேதுபந்தனமுமாகி விட்டது என்கிறானல்லவா கம்பன் ?

கம்பனுக்குப் பின்னே

இந்தச் ‘சேதுபந்தனம்’ குறித்து, சம்பூ ராமாயணம் என்று வடமொழியில் போஜராஜன் செய்ததாக வழங்கும் ராமாயணச் சுருக்கம் சொல்வதென்ன, தெரியுமா?



கடலிடையே ஆங்காங்கு வரிசையாக விழுந்தன்ன மரக் கூட்டம், சேதுபந்தனம் செய்து விடவில்லையாம். இனிக் கட்டப் போகும் சேதுவுக்காக நூல் பிடிப்பதற்கு அங்கமாய் முளைகள் அடித்திருப்பது போலவே தோன்றுகிறதாம். கொஞ்சம் கருத்து வேறுபாடு கம்பன் வருணனையிலிருந்து.

ஆதி கதை

இனி, ஆதிகவியான வால்மீகியிடம் போவோம். ஆச்சா முதலிய மரங்கள் அரசனைப் போர் வீரர்கள் பின்தொடர்வது போல் அனுமனைத் தொடர்ந்தனவாம்.

அனுமன் வேகமாய் உயரக் கிளம்புகையில் நிர்மலமான ஆகாயத்தில் இழுக்கப்பெற்ற பூமரங்கள் முதலியன, நெடுவழி செல்லப் புறப்பட்ட யாத்திரிகனைத் தொடர்ந்து வழியனுப்பச் செல்லும் உறவினர்போல் கொஞ்ச தூரம் பின் தொடர்ந்தனவாம்.

அனுமவேகத்தால் தாம் பெற்ற சக்தி அடங்கிப் போக, அம் மரங்கள் பூக்களை

உதிர்த்துக்கொண்டே கடலில் விழுந்தன. இது வால்மீகிக்கு, யாத்திரிகளை வழியனுப்பிவிட்டுக் கண்ணீர் சொரிந்த வண்ணம் திரும்பும் அன்பர்களை நினைப்பூட்டுகிறது. அழகான உவமை. முனிவருடைய சொந்த அனுபவமாகவும் இருக்கலாம்.

இன்னும் பார்ப்போம். மலர்கள் விளங்கும் மரங்களால் சூழப்பட்டு மலை போன்ற மாருதி வியக்கத்தக்க தோற்றமுடையவனானன். அனுமன் பன்னிற முள்ள மலர்களாலும் மொட்டுகளாலும் குருத்துகளாலும் மின்மினிப் பூச்சிகள் மொய்த்த மலைபோல் விளங்கினன். அனுபவத்தை ஒட்டி மனோபாவம் போகும் போக்கைத்தான் பாருங்கள்.

இன்னும் பாருங்கள். கடலிலே தூற்றப்பட்ட பூக்கள், நட்சத்திரங்கள் பூத்த வானம் போல் கடலை அலங்கரிக்கின்றனவாம்.

தாண்டிப்போகும் வேகத்திலே அனுமன் கடலைப் பானம் செய்து வானத்தை விழுங்க முயல்வது போல் காணப்படுகிறான். அதிசயமான ஒரு மனோபாவக் காட்சி.


உயர்ந்து வளர்ந்த வாலோ மேலே தூக்கிக் கட்டிய இந்திரத்வஜம் போல் திகழ்கின்றது. இப்போது கிளம்பும் காற்று மேக கர்ஜனை போல் முழங்குகிறது.

அனுமனின் நிழல் கடலில் விழ அந்தச் சரீரம் ஆகாயத்தில் காண்கிறதே, —அந்தக் காட்சி, காற்றினால் மோதப்பட்ட கப்பலின் அடிப்பகுதி நீரில் மூழ்கி மேல்பாகம் ஆகாயத்தில் காணப்படுவது போலிருக்கிறதாம். வால்மீகி பகவானும் கப்பலேறிக் கடலோடிப் பார்த்திருக்கிறாரா ?

அனுமன் செல்லும் வேகக் காற்றும் மேகக் காற்றும் சேர்ந்து பயங்கரமாய்க் கதறும் ஆழ்கடலை அலைத்துக் குலைக்கின்றனவாம். மலை போன்ற அலைகளை இழுத்துக் கொண்டு போகிறானாம் வானர சிரேஷ்டன்.

அப்போது தண்ணீர் விலக வெளிப்பட்டுத் தோன்றுகின்றன திமிங்கிலம்,





முதலை, பெரிய சிறிய மீன்கள், ஆமைகள் முதலியன. ஆடை விலகிய அவயவங்கள் போலே!—என்று அதிசயமாய்க் கூறுகிறார் முனிவர்.

அனுமன் வேகமாய்ச் செல்லும் வழியிலுள்ள சமுத்திர ஜலம் பெரிய பாத்திரம் போல் ஆக்கப் படுகிறதாம்.

மேகக் கூட்டங்களிலே அடிக்கடி நுழைந்து நுழைந்து வெளிப்படுகிறானும் அனுமன். அப்படி மறைந்து மறைந்து வெளிப்படும் சந்திரன் போலக் காண்கிறானே என்கிறார் வால்மீகி. ஆம்; அனுமன் கறுப்பனல்ல, வெள்ளைக்காரன்தான்!

அதிவேகமாய்க் கடலைத் தாண்டிச் செல்லும் அனுமன் மீது பூமாரி பொழிகின்றார் விண்ணவர்கள். ராம காரியமாய்ச் செல்லும் வானர சிரேஷ்டனைச் சூரியனும் வெப்பமான கிரணங்களால் சுடவில்லையாம். வாயுவும் குளிர்ந்து ஜில்லென்று வீசுகிறதாம்.

இந்த நிலையில்தான் ராமதூதன் சற்று இளைப்பாறிப் போகட்டுமென்று சமுத்திர ராஜா தன்னுள் மூழ்கி மறைந்திருக்கும் மைநாக பர்வதத்தை வேண்டிக் கொள்ளப் போகிறான்.

வால்மீகியின் கதைச் சுருக்கம் இது. ரஸமாகச் செல்லுகிறது கதை, அதி ரஸமான கவிதை வெள்ளத்தின் மேலே,—அனுமன் கடல் வெள்ளத்தின் மேலே செல்வது போல.

கம்பன் காட்சி

இனி நாம் கம்பன் கதைக்கும் கவிதைக்கும் வந்து விடுவோம். அனுமன் பாய்கின்ற விசையிலே கடல் கிழிபட்டுப் பாதாளமே வெளிப்படுவது போலத் தோன்றுகிறதாம். ஊழிக் காற்றுப் போலச் செல்லும் அந்த விசையைப் பொறுக்க முடியாமல் சுறா முதலிய மீன்கள் துடிக்கின்றன; துடிப்பற இறந்து விடுகின்றன.

இப்படிக் குழம்பி அலைபட்டுப்போகும் கடலைப் பாருங்கள்:

துள்ளிய மகர
மீன்கள் துடிப்பறச்
சுறவு தூங்க,
ஒள்ளிய பனைமீன்
துஞ்சும் திவலைய,
ஊழிக் காலின்



வள்ளுகிர் வீரன்
செல்லும் விசைபொறு
மறுகி, வாரி
தள்ளிய திரைகள்
முந்துற்(று) இலங்கைமேல்
தவழ்ந்த மாதோ!

[தள்ளிய மகர மீன்கள் துடிப்புற— தள்ளிக் கொண்டிருந்த மகர மீன்கள் துடிப்படங்கி மரண மூர்ச்சை அடைய. சுறவு தூங்க—சுறு மீன்கள் ஓர் இடத்தில் நிலையாது தத்தளித்துத் தவிக்க. ஒள்ளிய பனை மீன்—ஒளியையுடைய பெரு மீன்கள். துஞ்சும்—எழுந்திராத பெருந் தூக்கம் பெறுவதற்கு இடமான. திவலைய—நீர்த் துளிகள் வாரி இறைக்கப் பெற்ற. ஊழிக் காலின்—ஊழி காலத்துப் பிரசண்ட மாருதம் போல. வள் உகிர் வீரன்—கூர்மையான நகங்களையுடைய அனுமன். செல்லும் விசை பொறு — செல்லுகின்ற விசையைப் பொறுக்க முடியாமல். மறுகி—கலங்கி; குழம்பி. வாரி—சமுத்திரம். தள்ளிய திரைகள்—வீசியடித்துத் தள்ளிய அலைகள். முந்துற்று—முற்பட்டுச் சென்று. மாதோ—மாது, ஓ; ஈற்று அசை.]

அலைகள் வீசி யடித்து அனுமனுக்கும் முற்பட்டுப் போகின்றனவாம், இலங்கை நோக்கி. அந்தக் கரையிலும் போய் முட்டி மோதுகின்றனவாம். பகுத்தறிவை எப்படி அடித்துத் தள்ளி விட்டு ஓடுகிறது மனோபாவம்!

பகுத்தறிவும் மனோபாவமும்

போனால் போகட்டும். ஆனால் அரக்கர்கள் இந்தக் குழப்பங்களைக் கவனிக்க வில்லையா? அவர்களெல்லாம் பகுத்தறிவு வாதிகள். பெரும் புயற் காற்று முதலான இயற்கைக் காரணங்களினாலேயே கடல் அந்தப் பாடு படுகிறது என்று கருதியிருக்கக் கூடுமே— இல்லையா?

அனுமனோ, இத்தகைய பகுத்தறிவு வாதங்களைத் துளியும் காதில் போட்டுக் கொள்ளாமலே பாய்ந்து சென்று கொண்டிருக்கிறான் மகாகவியின் மனோபாவ வானத்திலே!

வெள்ளி மலைபாய்ந்து போவது போலப் போகிறானும்:

'அண்ணல்வாள் அரக்கன்
தன்னை அமுக்குவாம்
இன்னம்!' என்னுக்
கண்ணுதல் ஒழியச்
செல்லும் கைலையங்
கிரியும் ஒத்தான்.

[அண்ணல் வாள் அரக்கன் தன்னை —பெருமையில் சிறந்த கொடிய ராவணனை. அமுக்குவாம்—அமுக்குவோம். என்னு — என்று எண்ணி. கண்ணுதல் ஒழியச் செல்லும் — சிவபெருமானை விட்டு விட்டுத் தனியே போகும்.]

ஸாம கானத்திற்காக இரங்கி ராவணனை மன்னித்து வாளும் கொடுத்தாராம் சிவன். ஆகவே, அவர் இல்லாமல் இப்போது தனியே போனால், பரமேச்வரனுக்கும் முதுகுக்கு மண் காட்டப் பார்த்த ராவணேச்வரனை அலற அலற அமுக்கி விடலாமே!

வெள்ளி மலை போல் செல்லும் வெள்ளை வானரம் செல்லுகிற வேகம் மேலும் மேலும் அதிகரிக்கிறதாம்:

மழைகிழித்(து) உதிர
மீன்கள், மறிகடல்
பாய, வானம்
குழைவுறத், திசைகள்
கீற, மேருவும்
குலுங்க,—

[மழை—(இங்கே) மேகங்கள். மீன்கள்—நட்சத்திரங்கள். மறி கடல் — அலைகள் மடங்கி விழுகிற சமுத்திரம்.]

அந்தச் சண்டப் பிரசண்ட வேகத்தைக் கவிஞனுடைய மனோவேகம் தானே சொல்லிக் காட்ட முடியும்? பகுத்தறிவு காண முடியுமா, காட்ட முடியுமா?

* * *

இப் பகுதியில் வால்மீகி கம்பனைக் காட்டிலும் வசீகரமாகவே காண்கிறார்.



384 அனுமன் கல்வி

புலனடக்கமும் தூய அறிவும் ஸத்வ குணமும் சத்திய சக்தியும் அறப்பெருங் காதலும் அனுமனுக்கு அளித்திருக்கும் தேஜஸ் கொஞ்சமோ? இந்தப் பேரொளியழகே, தூய வெள்ளியங்கிரி போலவும், பொன்மலை போலவும் தோற்றம் அளிக்கக் கூடியது தானே?

இத்தகைய அனுமனை வருணிக்கும் கம்பன் வாக்கு :

மாணியாம்
வேடம்
தாங்கி, மல
ரயற்(கு)
அறிவுமாண்
(டு), ஓர்
ஆணியாய்
உலகுக்(கு)
எல்லாம் அறம்
பொருள்
நிரப்பும்
அண்ணல்.



(மாணி-பிரம்ம சாரி. வேடம்-வேஷம்; (இங்கே) வடிவம். மலர் அயற்கு—மலர் அயனுக்கு; தாமரை மலர் மீதுள்ள பிரம்ம தேவனைக் காட்டிலும். மாண்டு — மேம்பட்டு; தன்னை இழந்து. ஆணி — அச்சாணி, கடையாணி; ஆதாரம். அறம் பொருள் நிரப்பும் அண்ணல் — அறத்திலே பொருளை நிரப்பப் போகிற பெரியோன்.

ஒரு திறவுகோல்

எப்போதும் பிரம்மசாரியாக இருந்து படித்துக்கொண்டே இருப்பானும், புலனடக்கத்துடன் கற்கும் கல்வியல்லவா? அகத்திலும் முகத்திலும் ஒருங்கே ஒளிவீசும் கல்வி.

'மாணியாம் வேடம் தாங்கி' என்பது கவனிக்கத் தக்கது. வேடநெறி நில்லாதவர்களுக்கு வேடம் பயன் தருவதில்லை. ஆனால் நெறிநின்

ருல் நல்ல வேடம் நல்லதோர் அறி குறியாகி நற்பயன் அளிக்கக் கூடியது தான். நெறியும் குறியும் உள்ளத்திலே நிலைபெற வேடம் வடிவத்தோடு வடிவ மாய்ச் சேர்ந்து போகிறது.

'மலர் அயற்கு அறிவு மாண்டு' — பொருள் புதைந்த சொற்றொடர். பிரம்மா நாவிலே சரஸ்வதி அல்லது அறிவுத் தெய்வத்தைத் தரித்தவன் என்கிறது புராணம். சிருஷ்டி — சக்திக்கு அறிவு இன்றியமையாதது என்பது குறிப்பு. பிரம்மா நாவிலே அறிவைத் தரித்தவன் என்றால், அனுமனுக்கோ உடம்பெல்லாம் அறிவு மயம் தான்.

பிரம்மதேவனைக் காட்டிலும் அறிவிலே தன்னை முழுக்க இழந்து விட்டானும் அனுமன்.

அனுமனை நவ வியாகரண பண்டிதன் என்று சாதாரணமாய்ச் சொல்வதுண்டு. எனினும் அனுமனது அறிவு சிறந்த நற்பயன் தரத் தக்கதாகவும் அமைந்திருக்கிறது. ஆகவே இந்த அறிவு உலகப் பெரும் பணியாக மலர்ச்சி பெறப் போகிறதாம்.

இப்பேர்ப்பட்ட அனுமனை 'அறம் பொருள் நிரப்பும் அண்ணல்' என்று கூறும் நயம் கூர்ந்து நோக்கத் தக்கது. அறம் பொருளற்ற சொல்லாகி விட்டதாம் ராவணேச்வரன் ஆட்சியால். அந்தச் சொல்லிலே பொருளை மறுபடியும் கொணர்ந்து சேர்ப்பதே பெரிய காரியம்.

அனுமனோ, பொருள் வரண்ட 'அறம்' என்ற சொல்லிலே பொருள் நிரம்பச் செய்யப் போகிறானும், கானல் பறக்கும் கடுவெளிப் பாலைவனத்தைப் பசுமை கொஞ்சும் குளிர் பூஞ்சோலை களாக்குவது போலே.

'அறம்' அர்த்த புஷ்டியுள்ள சொல்லாகப் போகிறது அனுமன் பேராண்மையால், பெருங் குணத்தால், பேரறிவால், உலகப் பெரும் பணி புரியும் பகீரதப் பேராற்றலால்.

அனுமனுடைய குண விமர்சனத்திற்கு, — சுந்தர காண்டத்திலே மலர்ச்சி பெறும் அனும குணாதிசயத்திற்கு — ஒரு திறவுகோல், 'மாணியாம் வேடம் தாங்கி' எனத் தொடங்கி 'அறம்பொருள் நிரப்பும் அண்ணல்' என முடியும் இக்குறிப்பு.

'ஆண் தகை' என்று அனுமனை எடுத்த எடுப்பில் அறிமுகப் படுத்துகிறது சுந்தர காண்டம். முகப்பிலேயே இக் குறிப்பு அனுமனுடைய ஒழுக்க வன்மையையும் அறிவுப் பெருந் திறனையும் உலகப் பணி மீதுள்ள பேராசையையும், அறப் பெருங்காதலையும் அறிவிக்கிறது, இதிகாச தோரணையில். இத்தகைய அனுமனை இனி நாம் தொடர்ந்து செல்வோம்.

குண சௌந்தரியம்

விசுவரூப் அனுமனின் குண சௌந்தரியமே இப்போது தேஜஸாக வீசுவது போல் காண்கிறது. விசுவரூபத்தையும் அந்தப் பெரு வலிமையையும் நம் உள்ளத்திலிருந்து சற்று ஒதுக்கிப் பார்த்தால், அனுமனின் பிரம்ம தேஜஸ் இருள் கீறி உதயஞ் செய்த பூர்ண சந்திரன் போல் பிரகாசிக்கிறதாம்.

இந்த வசீகர தேஜஸைச் சற்று ஒதுக்கிப் பார்த்தால் மனக் கண்ணுக்குப் புலனாகின்றன, மேருமலையும் நாணத்தக்க வீரப் பெருந்தோள்கள்.

இத்தகைய அனுமனை இதோ பாருங்கள் :


கேழுலாம் முழுநி —
லாவின் கிளரொளி
இருளைக் கீறப்,

பாழிமா மேரு
நாண விசும்பிடைப்
படர்ந்த தோளான்.

[கேழ் உலாம் — ஒளி விளங்குகின்ற பூர்ண சந்திரிகை போல். கிளர் ஒளி — விளக்குகின்ற மேனி யொளி. பாழிமா மேரு — வலிமை பொருந்திய மகா மேரு மலை. நாண — ஒப்பாகாததால்

வெட்கமடையும்படி. விசும்பிடைப் படர்ந்த தோளான் — ஆகாயத்திலே படர்ந்து செல்லும் வீரப் பெருந் தோள்களையுடைய அனுமன்.]

இத்தகைய குண சுந்தரன், வீரத் தோளன் போகும் விசையிலே மலை மேடுகளெல்லாம் தொடர்ந்து செல்வது போலக் காண்கின்றனவாம். தூரத்திலுள்ள வானம் ஒதுங்கி ஒதுங்கிப் போவது போலத் தோன்றுகிறது.



கடல் எல்லாம் கலங்கத் தாவிப் போகும் இந்தப் போக்கு, கருட பகவானை நினைப்பூட்டுகிறதாம் :

திடலெலாம்
தொடர்ந்து
செல்லச்,
சேண்வி
சும்(பு)
ஒதுங்கத்,
தெய்வக்
கடலெலாம்
கலங்கத்
தாவும்
கலுழனும்
அனையன்
ஆனான்.

[திடல் — (இங்கே) மலை மேடுகள். எலாம் — எல்லாம். சேண் விசும்பு — தூரத்திலுள்ள வான வளையம். தெய்வக் கடல் — தெய்வத் தன்மை யுள்ளது போல், கரையில்லாமலே எல்லைக்கு உட்பட்டுப் பரந்து கிடக்கும் கடல். கலுழன் — கருடன். அனையன் ஆனான் — ஒத்திருந்தான்.]

வாலின் பெருமை

அனுமன் போகிறான், வாலும் போகிறதாம். துஷ்ட அரக்கர்களைத் தண்டிக்கப்போகும் எம பாசம் போலே. ஆனால் எம பாசத்திற்கும் ராட்சஸ பயம் என்றால் பயம்தானே :

'களித்துப்புன் ஞெழில்மேல் —
நின்ற அரக்கர்கண்-
ணு றுவ ராம்' என்(று),
ஒளித்துப்பின் செல்லுங்
கால பாசத்தை
ஒத்த தன்றே!

[கண்ணுறுவாம் என்று — தன்னைப் பார்க்கக் கூடுமே என்று எண்ணி. ஒளித்துப் பின்செல்லும் — அனுமனுக்குப் பின்புறத்திலே ஒளித்துக் கொண்டு போகிற.]

இந்தக் காலபாச வாலுக்குக் கம்பன் கொடுக்கும் பெருமை பக்தர்களையும் மருளச் செய்கிறது:

காலினால் அளந்த
வான முகட்டையும்
கடக்கக் கால
வாலினால் அளந்தான்
என்று வானவர்
மருளச் சென்றான்.

[வான முகட்டையும் — வானத்தின் உச்சியையும். கடக்க — கடந்து. கால வால் — காலபாசம் போன்ற வால்.]

'மகாவிஷ்ணு காலால் அளந்ததை அனுமன் வாலால் அளக்கிறானே!' என்று மருள்கிறார்களாம்.

கடல் தாவும் அனுமனையும் அந்த வாலையும் கவிஞன் கற்பனைக் கண்ணால் கண்டபடியே நாமும் கண்டு கொள்கிறோம். அந்த லட்சிய மகிமையோ நமது உள்ளத்திற்கும் தெய்வக் களிப்பூட்டுகிறது.

ஆனால் குழப்பம் ஏன்?

அனுமன் மலையிலிருந்து வேகமாய்க் கிளம்பும்போது குழப்பம் விளைத்தது போல், படுவேகமாய் வானவீதியில் போய்க் கொண்டிருக்கும் போதும் குழப்பம் விளைத்து விடுகிறானும். அவ்வீதி வழியாகச் செல்லும் தேவவிமானங்கள் ஒன்றோடொன்று தாக்கிக் கடலில் விழுகின்றனவாம், அனுமன் செல்லும் விசைக் காற்றினால். ஏன்?

பூஞ்சோலையில் ஊஞ்சலாடுகிறாள் ஒரு பெண், சுதந்திர தேவியின் புகழ் பாடிக் கொண்டே. அப்போது ஏற்படும் குழப்பங்களைத்தான் பாருங்கள்.

விசையாட்டம் ஆடும்போது பூக்களில் மொய்த்துத் தேனுண்ணும் வண்டுகள் கலைந்து ரீங்காரமிட்டு அங்குமிங்கும் அலைபடுகின்றன. மேலும், ஊஞ்சலாடுகிறவளின் காலால் மிதிபட்டுப் பூக்கள் நசுங்குகின்றன. சோலையின் சில வளங்கள் சிதைகின்றன. சுதந்திர லட்சுமியின் உபாஸனைதான். பெண், சுதந்திரத்தின் உபாஸகைதான்.


இக் கருத்தை அமைத்துப் பாரதியாரின் தோழர் ஒருவர் பாடியிருக்கிறார்:

பொற்பலகை மீதிவர்ந்து
பொம்மென்(று) அளிமுரல,
எற்பூ இடறி
எழிலார் வளம்சிதைத்துச்
சொற்புலவோர் வாழ்த்தும்
சுதந்திரைபேர் நாம்பாடி
விற்புருவம் வேர்வைஎழ
ஆடாமோ ஊஞ்சல்
விருப்பளிக்கு மாபாடி
ஆடாமோ ஊஞ்சல்.

[பொற்பலகை — அழகான, பொன்மயமான பலகை. மீது இவர்ந்து — மேலே பாய்ந்து சென்று. பொம்மென்று அளிமுரல — பொம் என்ற சத்தத்துடன் எழும்பி வண்டுகள் ரீங்காரஞ் செய்ய. எற்பூ — சூரிய காந்திப் பூ. எழில் ஆர் — அழகு நிறைந்த. சுதந்திரை — சுதந்திர தேவி. விற்புருவம் — வில்லைப் போன்ற புருவம். விருப்பளிக்குமா பாடி — நமது விருப்பங்களை அளிக்குமாறு பிரார்த்தனை செய்து பாடி.]

இத்தகைய சுதந்திர விழாக் குழப்பங்களைத்தான் கிளப்பூட்டுகின்றன, உலகத்திலே அறம் வளர்க்கப் பாயும் வீர அனுமன் விளைக்கும் குழப்பங்களும்.

இது அனுமன் கல்வி. ஸாராம்சத்தில் இன்றைய வாழ்வுக்கும் தேவையான புரட்சிக் கல்வி.



385. மலை போல வந்து....

இனி, அனுமனுடைய ஆகாச யாத்திரையைத் தொடர்ந்து போய் மைநாக மலையைச் சந்திக்க வேண்டும். முதலில் வால்மீகியை வழிகாட்டியாகக் கொள்வோம்.

மூல கதை

வானர சிரேஷ்டன் வானத்திலே சிரமம் இல்லாமல் வேகமாய்ச் சென்று கொண்டிருக்கும்போது, சமுத்திர ராஜன் அனுமனுக்கு உதவி செய்ய விரும்பினான். ராம தூதனை அப்படிச் சிரமப்படும்படி விடுவது தனக்கு அழகல்ல வென்று நினைத்தான்.

சற்று நேரம் இளைப்பாறிக் கொண்டால் அனுமன் அதி விரைவாக எஞ்சியுள்ள சமுத்திரப் பகுதியையும் தாவிப் போய் விடுவான் எனக் கருதினான் சமுத்திர ராஜா.

பிறகு தன் ஜலத்தில் மறைந்திருக்கும் மைநாக மலையை நோக்கி, 'தோழா, எழுந்திரு. ராம தூதன் வான வழியாக உனக்கு நேராய் வந்து கொண்டிருக்கிறான். உன்னை இங்கே கொண்டு வந்து சேர்க்க உதவிய வாயுவின் புத்திரன். மேலே வா. உன்னிடத்தில் அந்த அதிதி சிரம பரிகாரம் செய்து கொண்டு அக்கரை சேரட்டும்' என்றான்.

நீல வானத்தில் கதிரவன் உதிப்பது போல் மைநாகத்தின் தங்கச் சிகரங்கள் வெளிப்பட்டன. இத்தோற்றம் கண்ட அனுமனோ, 'இது நமக்கு நேர்ந்த முதலாவது இடையூறு!' என்று நினைத்தான்.

நினைத்ததும், தான் சென்ற வேகத்திலேயே, மலையை மார்பால் இடித்துத் தள்ளி விட்டான். மைநாகமோ வருத்தப் படவில்லை. அத்திறன் கண்டு வியந்தது, மகிழ்ந்தது!

பிறகு தன் சிகரத்திலே மானிட உருவில் மைநாகம் நின்றுகொண்டதாம். 'வானர சிரேஷ்டனே, என் சிகரங்களில் சற்று நேரம் சுகமாக இளைப்பாறு; அதிதி பூஜையை ஏற்றுக் கொள். என்னிடமுள்ள கிழங்கு, பழம் முதலியன அதி ருசியானவை, நன்மணமுள்ளவை' என்றதாம்.

தன் நன்றிக்கு ஒரு காரணமும் சொல்லிற்று. ஆதி யுகத்தில் மலைகளுக்குச் சிறகுகள் முளைத்திருந்தனவாம்.



உபகாரத்திற்குப் பிரதி யுபகாரமாக வாயு புத்திரனுக்கு அதிதி பூஜை செய்ய விரும்பிற்று.

அதுகேட்ட அனுமன், 'மலையரசே, நீ இப்படிச் சொல்வதாலேயே நான் விசேஷ உவகை அடைந்தேன். எனக்குச் செய்யும் அதிதி பூஜை இதுவே!' என்றான். பிறகு புன்சிரிப்புடன் வான வீதியிலே போய் விட்டான். சமுத்திர ராஜனும் மைநாகமும் ஆசீர்வதித்தனர்.

அனுமன் வெகு தூரம் உயரக் கிளம்பி மைநாகத்தை ஒரு தரம்அன்புடன்பார்த்து

வேகமாய்ப் பறந்து போகுமாம். பறக்கும் மலை உட்கார்ந்து விட்டால் நாசத்தைச் சொல்லவா வேணும்?

தேவர்களும் முனிவர்களும் திகைத்தார்கள், பயந்தார்கள். தேவேந்திரனே கோபத்துடன் வஜ்ராயுதத்தைத் தூக்கி விட்டான்.

'மயிலே, மயிலே இறகு போடு' என்று மயிலைக் கேட்டாலும் பலிக்கவில்லையே. 'மலையே, மலையே, இறகு போடு!' என்று விண்ணப்பித்துக் கொண்டால், நடக்கிற காரியமா? கோபாவேசத்துடன் சிறகுகளைத் துண்டு துண்டாய் வெட்டித் தள்ளி விட்டான் இந்திரன்.

ஓங்கிய வஜ்ராயுதத்துடன் மைநாகத்தையும் நெருங்கினான். 'அப்போது உம்முடைய தந்தையான வாயுபகவான் என்னை இந்தச் சமுத்திரத்திலே கொண்டு வந்து தள்ளி என் சிறகுகளைக் காப்பாற்றி விட்டார்' என்றது மைநாகம் அனுமனை நோக்கி. அந்த

விட்டு நிர்மலமான வான வீதியிலே போய்க் கொண்டிருந்தான். இதைக் கண்ட தேவர்களும் சித்தர்களும் முனி சிரேஷ்டர்களும் வானர சிரேஷ்டனைக் கொண்டாடினர்.

பழைய பகைவனான இந்திரனும் மைநாகத்தினிடம் அளவற்ற மகிழ்ச்சியடைந்தவனாய், 'இன்று முதல் என்னிடமிருந்து உனக்கு யாதொரு பயமுமில்லை' என்று அபயங் கொடுத்தான். இதனாலும் மைநாகத்திற்கு விசேஷ மகிழ்ச்சி யுண்டாயிற்று.

சுந்தர காண்டத்தின் முகப்பில் இப்படிக் காட்சியளிக்கும் மைநாகத்தை வால்மீகி, காண்டத்தின் இறுதியில் அனுமன் திரும்பி வரும்போதும் மறந்து விடாமல் சந்திக்க விடுகிறார்.

'வழியில் மைநாக மலையைக் கண்டு நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி விட்டு, வில்லிலிருந்து விடப்பட்ட பாணம்போல் அதி வேகமாய்க் கிளம்பி வந்தான் அனுமன்' என்கிறார்.

இப்படி இந்தக் கதையின் மூலத்தைத் தெரிந்து கொண்டு, கம்பனுடைய மைநாகக் கதையை நோக்குவோம்.

சண்டமாருதம் போல் அனுமன் சென்று கொண்டிருக்கும்போது திடீரென்று மைநாகம் வந்து தோன்றுகிறது:

மைந்நாகம் என்னும்
மலைவானுற வந்த –
தன்றே.

[வானுற – வானளாவ; வான வீதியில் பொருந்தி நிற்கும்படி.]

அனுமனுக்கு எதிரே ஆயிரம் சிகரங்கள் தங்க மயமாய் ஜொலிக்கவும் மின்வெட்டவும், கடல் மட்டத்தோடு வான வீதியும் ஒரு சேரப் படர்ந்ததாய் எதிர்ப்படுகின்றது மைநாகம்:

வீயோங்கு செம்பொன்
முடியாயிரம் மின் இ –
மைப்ப,
ஓயா அருவித்
திரள்உத் தரியத்தை
ஒப்ப –

[வீ ஓங்கு– மேற்புறமாக ஓங்குகின்ற. செம்பொன் முடி ஆயிரம் – செம்பொன் மயமாக ஒளி வீசும் ஆயிரம் சிகரங்கள். மின்இமைப்ப– மின்னல் கண் இமிட்டுவது போல் அந்தரத்தில் ஒளி செய்ய. ஓயா அருவித் திரள் – இடையறாத நீரருவி போல் பெருகும் கடல் நீர்த் தொகுதிகள்.]

மலை கடலுக்குள்ளே கிடந்தபோது சிகரப் பிரதேசங்களில் சுறாமீன்கள் உறங்கிக் கொண்டிருந்தனவாம். இப்போது மலை வெளிப்பட்டதும் அம்மீன்கள் உறக்கம் நீங்கித் தத்தளிக்கின்றனவாம்:

பிறங்கும் சிகரப்படர்
முன்றில் தொறும்
பிறைவோ(டு)
உறங்கும் மகரங்கள்
உயிர்ப்பொ(டு) உணர்ந்(து)
உலாவ—

[பிறங்கும்–விளங்குகின்ற. சிகரப் படர் முன்றில் தொறும்–சிகரங்களை



யொட்டி விசாலமாகவுள்ள முற்றங்கள் அல்லது வெறு நிலங்களில் எல்லாம். மகரங்கள்—சுறா மீன்கள். உயிர்ப்பொடு — பெரு மூச்சோடு. உணர்ந்து — துயி லுணர்ந்து ; தூக்கம் தெளிந்து.]

நீர் வடிந்த மலைப் பகுதிகளில் மீன் கள் பெருமூச்சுடன் தத்தளிக்க, பள்ள மான இடங்களில் வற்றாத சுனைகள் போல் நீர் தேங்கிக் கிடக்கவும் கூடு மல்லவா? அந்தச் சுனைகளிலே பனை மீன்களும் திமில் மீன்களும் துள்ளு கின்றனவாம் :

சுனையில் பனைமீன்
திமிலோடு தொடர்ந்து
துள்ள—

[சுனையில்—சுனைகளிலே. பனைமீன் திமில்—மீன் வகைகள்.]

ஐயமும் ஆற்றலும்

கண்ணுடிமீது உளுந்து உருளும் காலத்திற்குள்ளே இவ்வளவும் நடந்து விடுகிறதாம். மேலும் கீழும் எங்கும், முடியும் அடியுமாய்ப் படர்கின்றது மைநாகமலை. இக்காட்சியை வியப்புட னும் சந்தேகத்துடனும் நோக்குகிருன் அநுமன்.

இவனுக்குத்தான் அச்சம் என்பது தெரியாதே. எந்த மலை எப்படிச் சலித்தாலென்ன? — பாய்ந்து வரும் இந்த மலை சிறிதும் சலியாத வயிரம் பாய்ந்திருப்பதல்லவா ?

எழுந்தோங்கி விண்ணேடு
மண்ணெக்க, இலங்கும்
ஆடி
உழுந்தோடு காலத் திடை,
உம்பரின் இம்பர்
எங்கும்
கொழுந்தோடி நின்ற
கொழுங்குன்றை வியந்து
நோக்கி,
அழுங்கா மனத்தண்ணல்,
'இதென் கொல்?' என அ-
யிர்த்தான்.

[விண்ணேடு மண் ஒக்க - விண்ணும் மண்ணும் சமானமாக. இங்கே ' மண் ' என்று குறிப்பது கடல் நீர்மட்டத்தைத் தான். இலங்கும்—விளங்குகிற; (இங்கே) வழுவழுப்புடன் விளங்குகிற. ஆடி— கண்ணுடி. உழுந்து — உளுந்து. ஆடி உழுந்து—கண்ணுடிமீது இட்ட உளுந்து. ஓடு காலத்து — ஓடி உருளுகின்ற காலத் திற்குள்ளே. உம்பரின் இம்பர்—மேலும் கீழும். கொழுந்து ஓடி நின்ற — முடி யும் அடியும் படர்ந்து நின்ற. அழுங்கா மனத்து அண்ணல் — சலியாத மன முள்ள அநுமன். இது என் கொல்- இது என்னவோ. என - என்று. அயிர்த்தான் - சந்தேகித்தான்.]

அநுமனே தான் வந்து கொண்டி ருந்த அந்த வேகத்துடனேயே, அந்த வஜ்ரதேகத்தைக் கொண்டே, மலையைக் குப்புறத் தள்ளி விட்டு மேலே செல் லத் தொடங்குகிருன் :

' நீர்மேல் படரா
நெடுங்குன்று நிமிர்ந்து
நிற்றல்
சீர்மேல் படராதெ'னச்
சிந்தை உணர்ந்து
செல்வான்,
வேர்மேல்பட வன்றலை
கீழ்ப்பட நூக்கி,
விண்ணேர்
ஊர்மேல் படரக்கடி(து)
உம்பரின் மீ(து)உ-
யர்ந்தான்.

[நீர்மேல் படரா — கடல்நீர் மீது படர்ந்து. சீர்மேல் படராது — நன்மை தருவது ஆகாது. என — என்று. வேர் மேல்பட — மலையின் அடிப்புறம் மேற் புறமாக. வன்றலை — வல் தலை ; உறுதி யான சிகரம். நூக்கி — (மார்பினுல்) தள்ளிவிட்டு. விண்ணேர் ஊர்மேல் படர — தேவர்களின் ஊரளவு உயரத் திலே தான் செல்லும்படி. கடிது — விரைவாக. உம்பரின்மீது — ஆகா யத்தின்மேல். உயர்ந்தான் — உயர்ந்து கிளம்பினுன்.]

' மலைபோல வந்த இடையூறு பனி போலப் போயிற்று !' என்று அநுமன் அலட்சியமாகத் தள்ளிவிட்டுப் புறப் படுகிருன்.



386. அன்பு - விருந்து

அனுமன் தன்னைத் தள்ளி விட்டதால் மைநாகம் வருந்தித் துயரமடைந்த போதிலும் அன்பிற்கு யாதொரு பின்னமும் ஏற்பட வில்லையாம். 'ஓட்டை உடைசல்' இல்லாத பேரன்பு அனுமன் மீது மைநாகத்திற்கு.

அனுமன் கேட்ட மலைப் பிரசங்கம்

இத்தகைய அன்புடன் மைநாகம் தொடர்ந்து தன் விருந்து ;விண்ணப்பத்தைச் செய்து கொள்ள விரும்புகிறது, மானிட வடிவம் தாங்கி வந்து:

உந்தாமுன் உலைந்(து), உயர்
வேலை ஒளித்த,
குன்றும்,
சிந்தாகுலம்உற்றது,
பின்னரும், தீர்வில்
அன்பால்
வந்தோங்கி ஆண்(டு) ஓர்
சிறுமானுட வேடம்
ஆகி,
'எந்தாய்! இதுகேள்'
என, இன்ன இசைத்த
தன்றே.

[உந்தாமுன் — தள்ளுவதற்கு முன்னமே; அதாவது அனுமன் தள்ளியதுமே. (விரைவின் மிகுதி). உலைந்து— வருந்தி. உயர் வேலை — அலைகள் உயர்கின்ற கடல். சிந்தாகுலம் உற்றது — மனத்துயரம் அடைந்ததாகி. பின்னரும் — பின்பும். தீர்வில் அன்பால் — தீராத அன்பினால். வந்து ஓங்கி — ஓங்கி வந்து அனுமன் போகும் உயரத்தளவு ஓங்கித் தொடர்ந்து. ஆண்டு— அவ்விடத்தில். ஓர் சிறு மானுட வேடம் ஆகி — சிறியதொரு மனித வடிவம் கொண்டு. எந்தாய் — என் ஐயனே. இன்ன— இவ்வார்த்தைகளை. இசைத்தது— சொல்லிற்று.]

'மைநாகம்' என்று மலையை மட்டும் குறிப்பிடுவதாகத் தோன்றவில்லை. மலையின் அதிதேவதையாகிய மலைத் தெய்வத்தைக் குறிப்பிடுகிறார்கள் ராமாயணக் கவிகள்.

இந்த மைநாகத்தை அனுமன் தந்தையாகிய வாயு பகவான் காப்பாற்றி விட்டாரல்லவா இந்திர கோபத்திலிருந்து? அந்த நன்றியை மறக்க முடியவில்லையாம் மைநாகத்திற்கு. மெய்யன்பைச் செய்நன்றி தூண்டி வளர்த்து வந்திருக்கிறது.

முரட்டு மலையாகச் சந்தித்த மைநாகம் இப்போது அந்த மலையளவு அன்பை

யும் சிறு மானிட வடிவத்திலே குறுக்கிக் குவித்த வண்ணம் அனுமன் முன் தோன்றுகிறது.

மைநாக—மானுடன் வேண்டிக் கொள்கிறான். 'எனது மகோபகாரியாகிய வாயு தேவனுடைய அருமைப் புதல்வனாகிய நீ அந்த நட்பு முறையில் என் சிகரத்தின் மீது சிறிது போது தங்கி இளைப்பாறிக் கொண்டாவது அப்பால் போக வேண்டும்?

'வேறு என்ன உபகாரம் நான் உனக்குச் செய்யப் போகிறேன்? உன்னால்

உன்னால் உயர்ந்தேன்,
உயர்விற்கும் உயர்ந்த
தோளாய்!

[அன்னான் — அப்படி என்னைக் காப்பாற்றிய அந்த வாயு தேவனை. அருங்காதலன் ஆதலின் — அருமையான புதல்வன் ஆனதால். ஈண்டு — இப்போது இங்கே. செயற்கு அரிதாயது — செய்வதற்கு அருமையான உபகாரம். இன்மை — இல்லாமலிருத்தலால். பொன்னார் சிகரத்திடை — பொன்னிறமாக ஒளிரும் என் சிகரத்



உயர்ந்தேன்' என்றெல்லாம் மலை—மானுடன் வானர-மலையிடம் சொல்வதைக் கேளுங்கள்:

அன்னான் அருங்காதலன்
ஆதலின், அன்பு
தூண்ட,
என்னால் உனக்(கு) ஈண்டு
செயற்கரி(து) ஆய
தின்மை,
பொன்னார் சிகரத்திடை
ஆறினை போதி
யேனும்,

திலே. ஆறினை — இளைப்பாறினவனாய். போதியேனும் — போவாயானாலும். உயர்ந்தேன் — உன்னால் உயர்வு பெற்றவனாவேன்.]

அனுமன் வரும் செய்தியைச் சமுத்திர ராஜன் தனக்குத் தெரிவித்ததாகவும் மைநாக — மானுடன் சொல்லுகிறான். தன்னை நண்பனாக நம்பித் தங்க வேண்டுமென்றும், தான் அளிக்கும் விருந்தை அங்கீகரிக்க வேண்டுமென்றும், உண்டியும் உறையுளும் அளித்து

உதவுவது உற்றார் செயல் என்றும் மைநாக — மானுடன் தெரிவிக்கிறான்.

பண்டிதர் சிரிப்பு


இந்த வார்த்தையைக் கேட்டதும் 'இது குற்றம் இல்லாதவன் பேச்சு' எனத் தெரிந்து கொள்கிறான் அனுமன்.

உரைத்தான் உரையால்,
இவன் ஊறிலன் எப்ப(து)
உன்னி,
விரைத்தாமரை வாள்முகம்
விட்டு விளங்கு
வீரன்,
சிரித்தான் அளவே
சிரித்துத், திசைசெல்ல
நோக்க,
வரைத்தாள் நெடும்பொற்
குடுமித்தலை மாடு
கண்டான்.

[உரைத்தான் உரையால் — அப்படிப் பேசிய மைநாகத்தின் பேச்சினால். ஊறுஇலன் — குற்றம் இல்லாதவன். உன்னி — நினைத்து. விரைத் தாமரை —வாசனையுள்ள தாமரைப் பூ. தாமரை வாள்முகம் — தாமரை மலர் போன்ற ஒளி முகம். விட்டு விளங்கு வீரன் — முகத்தை இறுக்கிப் பிடித்திருந்த சதைப் பற்றுகள் நெகிழ்ந்து நகை விளங்கப்பெற்ற வீர அனுமன். திசை செல்ல நோக்க - தான் சென்று கொண்டிருந்த திசையிலேயே தொடர்ந்து செல்லுமாறு நோக்கவே. வரைத்தாள் நெடும்பொற்குடுமித்தலை- அடிப் பாகத்தோடுகூடிய மலையின் பெரிய பொன் மயமான சிகரமாகிய முடிப் பாகத்தை. மாடு — அருகே.]

மலையின் மானுடப் பேச்சிலே, 'இங்கே இடையூறு ஒன்றும் இல்லை, அன்புதான் வெளிப்படுகிறது' என்று தெரிந்து தெளிகின்றான் அனுமன். இந்த உணர்வு ஏற்பட்டதும், இதற்கு முன் மலையைத் தள்ளிய அந்த வீர முகப் பெருமை—காம்பீர்யம் —சற்றுத் தளர்ந்து முகம் விளங்கச் சிரிப்பும் உண்டாகிறதாம்.

ஒரு பேராசிரியரை ஸார்ட்டர் ரிஸார்ட்டஸ் என்ற நூலில் கார்லைல் என்ற ஆங்கில ஆசிரியர் வருணித்திருக்கிறார். சாதாரணமான பஞ்சாங்கம் முதல் அசாதாரண வேதாந்த சாஸ்திரங்கள் வரை வாசித்திருந்த அப்பேராசிரியருக்கு நம்மைப்போல் சிரிப்பு வருவதேயில்லை என்கிறார் கார்லைல். அபூர்வமாக ஒரே ஒரு தரம் சிரிப்பு வந்ததாம். வந்த



சிரிப்பை நிறுத்த முடிய வில்லையாம். பல குதிரைகள் ஏக காலத்தில் கனைப்பது போலிருந்ததாம், அந்தச் சகல கலா வல்லபரின் அந்தப் பெருஞ் சிரிப்பு.

அனுமன் என்ற இந்த நவவியாகரண பண்டிதருக்கும் சாதாரணமாய்ச் சிரிப்ப வருவதில்லை.

களியா உள்ளத்(து)
அண்ணல்

— அதாவது களிப்பு, அல்லது சிரிப்பு வாராத உள்ளத்தையுடைய பெரியோன் என்றுதான் வருணிக்கிறான் கவிஞன் அனுமனை 'ஊர்தேடு படல'த்திலே.

இப்பேர்ப்பட்ட அனுமனுக்கும் சிரிப்பு வந்து விடுகிறதாம் இப்போது. ஆனால் கார்லைல் துரையின் சகலகலா வல்லபரைப் போல் ஒரே நெடுஞ் சிரிப்பாய்ப் பெருஞ் சிரிப்பாய்க் குதிரைச் சிரிப்பாய்ச் சிரித்து விடவில்லையாம் அனுமன்.

சிரித்தான் அளவே
சிரித்து

என்கிறான் கவிஞன்.

சிரிப்பு வந்து விடுகிறது. பெருஞ் சிரிப்பாகவும் வளர்ந்து விடப் பார்க்கிறது. ஆனால், அனுமன் சிரிப்பை அடக்கி அளவுக்கு உட்படுத்தி விடுகிறானும்.

அன்பு-மதம்

இப்படிச் சிரிப்பை அடக்கிக் கொண்டு மீண்டும் தென் திசையில் தொடர்ந்து செல்லப் பார்க்கிறான். பார்த்ததும், அனுமன் தங்கிப் போவதற்கும் விருந்து சாப்பிடுவதற்கும் வசதியான நிலையில் மைநாகத்தின் பெரிய பொன்மயமான சிகரம் வெகு சமீபத்தில் தோன்றி நிற்கிறது.

இவ்வளவு அன்பையும் எப்படித் தள்ளிச் செல்வது —எப்படிப் புறக்கணிப்பது? லட்சிய மயமாகவே யிருக்கும் அனுமனும் அன்பிற்குக் கட்டுப்படுகிறான். அன்பு மயமான மைநாகத்தைப் பார்த்துச் சொல்லுகிறான் :

வருந்தேன், அதுஎன்துணை
வானவன் வைத்த
காதல் ;
அருந்தேன் இனியாதும் என்
ஆசை நிரப்பி
அல்லால் ;
பெருந்தேன் பிழிசாலும்நின்
அன்பு பிணித்த
போதே,
இருந்தேன்! நுகர்ந்தேன்!
இதன்மேல் இனிஈவ(து)
என்னோ ?

[என்துணை — என் அளவும். வானவன் - மேலானவனாகிய ராமன். வைத்த - இங்கே தாழவிட்ட. அருந்தேன் - உண்ண மாட்டேன். தேன் பிழி சாலும் - தேன் பிழிந்ததை ஒத்த. பிணித்தபோதே - கட்டிய போதே. நுகர்ந்தேன் — விருந்து சாப்பிட்டவனானேன். ஈவது என்னோ — கொடுக்கக் கூடியது என்னதான் இருக்கிறது.]

'எனக்கு வருத்தம் அல்லது களைப்பு இருந்தால் அல்லவா இளைப்பாற வேண்டிய அவசியம் ஏற்படும் : எனக்குத்தான் வருத்தம் என்பதே தெரியவில்லையே' என்கிறான் அனுமன். காரணம், எல்லோருக்கும் மேலான ராமபிரான் தன்னையும் தாழவிட்ட காதலே என்கிறான்.

களைப்பு இல்லாமல் இருப்பதுபோல் ராம கைங்கரியத்திலே பசி தாகங்களும் ஏற்பட வில்லையாம். ஆசை நிரப்பினுலொழிய வயிற்றை நிரப்ப நினைவே வரப்போவதில்லையாம். இது அனுமனது உண்ணுவிரதத்தின் இரகசியம்.

ராமனின் அன்பு அப்படி இழுத்துக் கொண்டு போக, மைநாகத்தின் அன்பு எவ்வளவோ விசையாகச் சென்று கொண்டிருக்கும் அனுமனையும் கட்டி நிறுத்தி விடுகிறதாம், இவ்வளவு சொற்ப நேரமாவது.

பிழிந்த தேன் போலிருக்கிறது இந்த அன்பு என்று பேசுகிறது, கறந்த பால் போலிருக்கும் அனுமனுள்ளம். இத்தகைய அன்பைக் காட்டிலும் சிறந்த விருந்தும் உண்டோ?



387. அன்பே பூஜை

அன்பைக் காட்டிலும் சிறந்த விருந்து இல்லை என்று அனுமன் வாயிலாகத் தெரிந்து கொண்ட நாம், இனி அன்பிற் சிறந்த பூஜையும் கிடையாது என்பதையும் தெரிந்து கொள்வோம்.

அன்பும் பணியும்

எமபாசத்தையும் எளிதில் அறுத்துத் தள்ளக் கூடிய அனுமனும் அன்புப் பாசத்திலே எளிதில் கட்டுப்பட்டுத் தன் விசுவரூப மிடுக்கையும் ஒடுக்கி நின்று,

இருந்தேன்! நுகர்ந்தேன்!
இதன்மேல் இனிஈவ
தென்னே!

என்கிறான் மைநாகத்தை நோக்கி.

தன்மீது அப்படி அன்பு செலுத்திய மலை மீது தானும் அன்பு பொழிந்து, 'நான் உன்னுடன் இருந்தேன், விருந்து நுகர்ந்தேன் என்றே நீ பாவித்துக் கொள்ள வேணும்' என்று வேண்டிக் கொள்கிறான் உசிதமாக, விநயமாக.

வாழ்க்கை அன்பு மயமாகும்போது பணி இன்ப மயம் தானே? இது அனுமன் கண்டு கொண்ட அன்பு—மதம் எனக் காட்டுகிறான் கவிஞன். இந்த அன்பு—மதத்தைத் தன் பெருங் கொள்கைகளில் ஒன்றாக வெளியிடுகிறது தமிழகத்திலே வளர்ந்த ஸ்ரீ வைஷ்ணவ மதம்.

பரமாத்மாவை ஆண்டான் என்றும் ஜீவாத்மாவை அடிமை என்றும் பக்தர்கள் கருதுகிறார்கள் அல்லவா? 'அடிமைத் தனம் துன்ப மயமன்றோ?' எனப் பகுத்தறிவு நகையாட, பக்தி பேசுகிறதாம், பக்தர்களுக்கு அந்த நியமம் இல்லையே என்று. 'உகந்த விஷயத்தில் அடிமை செய்வது சுகம்தானே' என்ற லௌகிக அனுபவத்தையும் சுட்டிக் காட்டுகிறது.

காதலர்-உலகில் காதலிக்காகக் காதலனும், காதலனுக்காகக் காதலியும் செய்யக் கூடிய எத்தகைய பணிகளும் இன்பம் தானே?

பின்னிய கூந்தல்—
பேதையின் இளமுகம்
என்உளத் திருந்(து)இங்(கு)
இயற்றுவ திப்பணி

என்கிறான் காதலன் 'மனோன்மணீய' நாடகத்திலே.

இந்தக் கம்ப நாடகத்திலேயே மலை போன்ற சிவதனுசு மணமாலை போலத் தோன்றவில்லையா மாப்பிள்ளைக்கு?

ராமபக்தர்களாகிய அனுமன் அங்கதன் முதலானவர்களுக்கு எத்தகைய ராம கைங்கரியமும் இன்பம்தானே?

வாழ்க்கையை அன்பு மயமாக்கிக் கொண்டால் கைங்கரியம் இன்பமயமாகி விடும் என்ற கொள்கை, பக்திக்கும் வாழ்க்கைக்கும் ஒருங்கே இசைந்த பரந்த அனுபவ ரகஸ்யம். பகிரங்க ரகஸ்யமும்தான். என்றாலும் நம்மில் எத்தனை பேர் இதை உணர்ந்து வாழ்க்கை நடத்துகின்றார்!

பூஜையின் இரகசியம்

இனி, இந்தக் கொள்கையைத் தன் வாழ்வினை இயக்கும் ஒரு தனிப் பெருங் கொள்கையாக மேற்கொண்டு ஒழுகும் அனுமன், அன்பையே பூஜையாகவும் கொள்கிறான்: இதையும் பார்ப்போம்.



மைநாகத்தின் உபசாரம் கேவலம் வாய் உபசாரமன்று, இதயத்திலிருந்து நேராக வரும் அன்புப் பூஜை. இது தானே அதிதி உபசாரம் அல்லது அதிதி பூஜையின் ஸாராம்சம்? அனுமன் சொல்லுகிறான்—என், மைநாகத்தையே கேட்கிறான்:

முன்பிற் சிறந்நார், இடை
உள்ளவர், காதல்
முற்றப்
பின்பிற் சிறந்நார்
குணம்நன்றிது; பெற்ற
யாக்கைக்கு
என்பிற் சிறந்நாயதொர்
ஊற்றம்உண்(டு) என்ன
லாமே?
அன்பிற் சிறந்தாயதொர்
பூசனை யார்கண்
உண்டே?

[முன்பில் சிறந்தார்—முதல் வள்ளல்கள். இடை உள்ளவர்—இடை வள்ளல்கள். காதல் முற்ற—காதல் அல்லது ஆசை பூர்ணமாகும்படி. பின்பில் சிறந்தார்—கடை வள்ளல்கள். குணம் நன்று இது—குணமாகிய இந்த அன்பே நன்று. பெற்ற யாக்கைக்கு—நாம் பெற்றிருக்கும் உடம்புக்கு. என்பின் சிறந்தாயதொர் ஊற்றம்—எலும்பைக் காட்டிலும் உறுதியாக்கும் பற்றுக்கோடு. உண்டு என்னலாமே—உண்டு என்று சொல்ல முடியுமா. அன்பில்—அன்பைக் காட்டிலும். சிறந்தாயதொர் பூசனை—சிறந்திருப்பதாகிய ஒரு பூஜை. யார்கண் உண்டே—எவரிடம் தான் உண்டு.]

அன்பிற் சிறந்த பூஜையும் இல்லை என்ற இப்பெருஞ் சித்தாந்தத்திற்காக மூவகை வள்ளல்களையும் சாட்சி கோருகிறான் அனுமன். இந்த வள்ளல்களில் முதன்மையானவர்கள், வேண்டாதிருப்பவரிடத்திலும் தாமே வலியப் போய்க் கொடுத்து உதவு

வார்களாம். வேண்டக் கொடுப்போர் இடைவள்ளல்கள். புகழக் கொடுப் போர் கடைசி ரகம்—கடை வள்ளல் கள்.

இம் மூவகை வள்ளல்களும் அன் புப் பெருநெறி பிடித்துச் செல்வோர் களே. வேண்டாதாரையும் விரும்பி அணைத்துக் கொள்கிறது தூய



பேரன்பு. வறுமை வந்து வேண்ட இரங்கி அருள் புரியும் அன்பும் உண்டு. முகஸ்துதியில் மகிழ்ந்து உதவ முற்படுவ தும் அன்புதான் — தாழ்ந்த ஜாதி!

இப்படி மூவகை வண்மைகளுக்கும் தூண்டுகோலான அன்பு,உயிர்க்கு இன்றி யமையாதது. உடலுக்குள் எலும்புக் கூடுபோலே, உயிருக்கு அன்பு.

அன்போ(டு) இயைந்த
வழக்கென்ப ஆருயிருக்(கு)
என்போடு இயைந்த
தொடர்பு

என்று திருவள்ளுவர் காட்டும் அன்புப் பெருநெறிதான், அப் பெருந்தகையின் ஞான புத்திரனும் அன்புச் சீடனுமாகிய கம்பன் இங்கே அருமையாக அனுமன் வாயிலாக வெளியிடுவதும்.

திருக்குறள் என்ற தமிழர் பொது மறை — சமரஸ சன்மார்க்க வேதம் — வெளியிடும் அன்புப் பெருங்கொள்கை தான் எவ்வளவு வசீகரமாக வெளிப்படு கிறது,

அன்பிற் பிறந்தாயதோர்
பூசனை யார்கண்
உண்டே ?

என்ற அட்சர லட்சம் பெறும் மகாவாக் கியத்திலே!

இந்த அன்புப் பூஜையில் தான் அதிதி பூஜை கொண்டதாகவே அனுமன் பாவித்துக் கொள்கிறான். இப்படியே மைநாகமும் பாவித்துக்கொள்ளவேண்டு மென்று வேண்டிக் கொள்கிறான்.

ஆனால் 'அன்பு - விருந்தே போதுமா? விருந்துச் சாப்பாடு வேண்டாமா?' என்று குறுக்குக் கேள்வி கேட்கிறது பகுத்தறிவு. அன்பு - விருந்தோடு விருந்துச் சாப்பாடும் அவசியம் தான் என்று கருதுகிறவன் தான் அனுமனும். மைாகத்தை நோக்கி, 'ராமகாரியத்தை முடித்துத் திரும்பி வரும்படியான சக்தி எனக்கிருந்தால், வரும் வழியில் உன்னோடு விருந்து சாப்பிடுவேன்' என்கிறான்.

இப்படி மைநாகத்திற்குச் சமாதானம் சொல்லி விட்டு அப்பால் போகிறான் ராமதூதன் :

'ஈண்டே கடிதேகி
இலங்கை விலங்கல்
எய்தி,
ஆண்டான் அடிமைத்தொழில்
ஆற்றிஎன் ஆற்றல்
கொண்டே
மீண்டால், நுகர்வென்உன்
விருந்தென'. வேண்டி
மெய்ம்மை
பூண்டான்அவன் கட்புலம்
பிற்பட முந்து
போனான்.

[ஈண்டே — இப்பொழுதே. இலங்கை விலங்கல் — இலங்கை மலை; அதாவது திரிகூடமலை மீது உள்ள இலங்கை. எய்தி — அடைந்து. ஆண்டான் அடிமைத்தொழில் — என்னை ஆட்கொண்ட ராமன் கட்டளையிட்ட தொழில். ஆற்றி — செய்து முடித்து. என் ஆற்றல் கொண்டே மீண்டால் — திரும்பி வரும்படியான சக்தி எனக்கிருந்து நான் மீண்டு வந்தால். மெய்ம்மை பூண்டான் அவன் — தன்னிடம் மெய்யன்பு பூண்ட அந்த மைநாக மானிடனின். கட்புலம் — கண் பார்வை. முந்து போனான் — முற்பட்டு விரைந்தான்.]

மைநாகன் மெய்யன்புடன் வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டேயிருக்க, அந்த நெடுநோக்கும் பிற்பட முற்பட்டுப் படுவேகமாய் அந்தப் பார்வைக்கும் எட்டாத தொலை தூரத்திலே போய் விடுகிறானும்.

சரி; இந்த அனுமன் வரும் வழிமேல் விழி வைத்து, அறுசுவை யுண்டியும் தயாரித்து அன்பையும் ஏழாவது சுவையாகச் சேர்த்து வைத்துக் காத்திருப்பானே மைநாகன் ! அப்படித் திரும்பும் வழியிலாவது அனுமன் வாக்களித்தபடி விருந்து சாப்பிட்டானா ?

சீதையைக் கண்டு பிடித்த ராம கைங்கரிய ஆசை பூர்த்தியானதும் அந்தச் செய்தியை ராமனிடம் அப்படியே போய்ச் சொல்லவேண்டும் என்ற ஆசை வந்து விடுகிறது அனுமனுக்கு. எனவே, கைங்கரிய ஆசை இன்னும் நிரம்பிய பாடில்லை. எனவே, வயிற்றை நிரப்ப வேண்டுமென்ற உணர்ச்சி அப்போதும் எற்படவில்லை.

திரும்பி வரும்போது மைநாகமலையை முறைப்படி அடைந்து இலங்கையில் நிகழ்ந்த செய்தியை மைநாகன் காதிலே போட்டு ஒரு கணப் பொழுதிலே மகேந்திர மலையில் போய்க் குதித்து விடுகிறானும். எனவே, அப்போதும் விருந்து சாப்பிட அவகாசம் இல்லை. முன்னிலும் அவசரமாய் முழு வேகமாய்ப் போகும் அனுமனிடம் விருந்துப் பிரஸ்தாபத்தை மீண்டும் செய்யவே மறந்து விடுகிறான். அனுமன் அளித்த மங்களச் செய்தியைத் தானே செவி — விருந்தாக நுகர்ந்து திருப்தி படைகிறான். மைநாகத்தின் விருந்து அன்பு — விருந்தாகவே, அன்புப் பூஜையாகவே நின்று விடுகிறது.

* * *

இப்போது மாருதி செல்லும் சண்டமாருத வேகத்திலே சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், மேகங்கள், தேவர்கள் செல்லும் வேறு வேறு விமானங்கள் எல்லாம் ஓரிடத்தில் ஒன்றாய்த் திரண்டிருப்பது போலக் காண்கின்றனவாம். அன்பின் வேகமோ இதற்கும் மேலானது. வேற்றுமைகளில் ஒற்றுமையும் பன்மைகளில் ஒருமையும் காட்டுவதில் எவ்வளவு சிறந்தது அன்புப் பூஜை !



பி.ஸ்ரீ

388. ஒரு நாடக ஒத்திகை

ஒரு பெருங் காரியத்தை — செயற்கரிய செயலொன்றை — நாம் செய்ய முற்பட்டால், முதலாவது இடையூறு நமது அன்பிற்கு உரிய உறவினர்களாலும் நண்பர்களாலுமே பெரும்பாலும் ஏற்படக் கூடும். இத்தகைய இடையூறு கடல் தாவும் அனுமனுக்கு முதல்முதல் மைநாக மலையால் ஏற்பட்டது.

தேவ சோதனை (ஆதி கதை)

இனி வேறொரு இடையூறு தேவ சோதனையாக ஏற்படுகிறது. அனுமன் கடல் தாவும் வேகம் அதிகரிக்கிறது. வழியிலே ஒரு கொடிய அரக்கி அனுமனை விழுங்க முயல்வாளே, அந்த ஆபத்தை அனுமன் சமாளித்து விடுவானா? அதற்கு உரிய பலமும் புத்தி சாமர்த்தியங்களும் இவனுக்கு உண்டா? தேவர்கள் ஒரு சோதனை செய்து பார்க்க விரும்புகிறார்கள்.

இந்தத் தேவ சோதனை குறித்து நாம் முதன் முதல் வால்மீகி சொல்வதைக் கேட்போம். தேவர்கள் நாக மாதாவான ஸுரஸா தேவியை உபசரித்து, 'நீ அரக்கி வடிவம் கொண்டு, பயங்கரமான பற்களுடனும் சிவந்த கண்களுடனும் அனுமனை எதிர்ப்பட்டு அவனுக்கு இடையூறு செய்' என்றார்கள்.

ஸுரஸையை அனுமன் 'உபாயத்தினால் வெல்லப் போகிறானா, அல்லது துன்ப முற்றுத் திகைத்துப் போவானா? இதை அறிய விரும்பினார்கள் தேவர்கள்.

ஸுரஸையும் அவர்கள் விருப்பத்திற்கு இணங்க, சமுத்திரத்தினிடையே அரக்கி யுருவம் தரித்து அனுமன் போகும் வழியைத் தடுத்து நின்றாள். விகாரமும் கோரமும் பயங்கரமுமாக இருந்தது அந்த உருவம்.

அனுமன் எதிரே வந்ததும், 'நீ தேவர்களாலே எனக்கு இரையாக நியமிக்கப்பட்டாய். நான் உன்னைத் தின்னப் போகிறேன். என்னுடைய இந்த வாய்க்குள் புகுவாய்' என்றாள். அனுமன் முகமலர்ந்து கை கூப்பி, ராமன் வரலாற்றைச் சுருங்கச் சொல்லி, தான் சீதையிடம் ராமதூதனாகச் செல்வதாகவும் தெரிவித்தான். ராம காரியத்திற்கு அவளும் துணை புரிய வேண்டுமென்று வேண்டிக் கொண்டான்.

அவளுக்கு உதவி செய்ய இஷ்டமில்லையென்றால், 'நான் சீதையையும் ராமனையும் கண்டு கொண்டு உன் வாயை வந்தடைகிறேன், — நானே வந்தடைகிறேன்' என்று உறுதி கூறினான்.

ஸுரஸையோ வாயை வேகமாய் மிகப் பெரிதாய்த் திறந்து கொண்டாள். அப்போது அனுமனும் அதற்குத் தகுந்தபடி தன் உருவத்தை வளரச் செய்து கொண்டான். மேலும் மேலும் அவள் வாயை அகன்றதாய்ச் செய்து கொள்ள, அனுமனும் அப்படி வளர்ந்து கொண்டே போனான்.

ஸுரஸையின் பிளந்த வாய் நீண்ட நாக்குடன் மிகவும் கோரமாய் நரகத்தை ஒத்திருந்தது. அனுமன் பளிச்சென்று தன் உடம்பைச் சுருக்கிக்கொண்டு மகா வேகத்துடன் அந்த வாய்க்குள் புகுந்து உடனே வெளிக் கிளம்பி விட்டான்.

வானத்தில் நின்று கொண்டு அவளை நோக்கி, 'உனக்கு வந்தனம். சீதையிருக்குமிடம் போய் வருகிறேன்' என்றான். கிரகணத்திலிருந்து விடுபட்ட சந்திரன் வான வீதியில் ஒளிர்வது போல் ஒளிரும் அந்த வானரனைக் கண்டதும் ஸுரஸையும் சுயரூபம் எடுத்துக் கொண்டாள். 'சுகமாய்ச் செல்வாய். ராமனோடு சீதையைச் சேர்த்து வைப்பாய், மகிழ்ச்சி கொள்வாய்' என்றாள்.

அனுமனுடைய அந்தச் செயற்கருஞ் செயலைக் கண்டு, 'நன்று, நன்று' எனக் கொண்டாடின உயிர்களெல்லாம். அனுமன் கருடன் போலச் சென்று மேகக் கூட்டங்களில் அடிக்கடி நுழைந்தும் வெளிப்பட்டும் காணப்பட்டான்.

இனிமேல் அனுமன் கொழுத்த ஸிம்ஹிகை என்ற நிஜ அரக்கி இருக்கும் இடத்திற்கு வருகிறான். இது வால்மீகியின் கதைச் சுருக்கம்.

அக அழகும் முக விகாரமும்

தேவர்களுடைய வேண்டுகோளின்படி சுரசை (ஸுரஸா) அனுமனது பலத்தைச் சோதிக்க அரக்கி உருவெடுத்து வருகிறாளென்பதைக் கம்பன் எடுத்துரைக்கும்போது, பின்வருமாறு அறிமுகப் படுத்துகிறான் :

> ஆன்றுற்ற வானோர்
> குறைநேர அரக்கி
> யாகித்
> தோன்றுற்று நின்றாள்
> சுரசைப் பெயர்ச்சிந்தை
> தூயாள்

[ஆன்று உற்ற — மிகுதியாக வந்து சேர்ந்த. வானோர் குறை நேர—தேவர்கள் வேண்டிக்கொள்ள. தோன்றுற்று — தோற்றமளித்து. சுரசைப் பெயர்ச் சிந்தை தூயாள் — ஸுரஸை என்ற பெயரைக்கொண்ட மனத்தூய்மை யுடையவள்.]

'சிந்தை தூயாள்' — இந்த அகத் தூய்மை முகத்திலும் பிரதிபலிக்கத் தானே செய்யும்? 'அரக்கியாகித் தோன்று'ம் போதும் அனுமன் முகத்தைக் கூர்ந்து கவனித்து 'இவள் நல்லவள்' என்பதைக் கண்டு கொள்ளப் போகிறான்.

ஆனால் இப்போது அரக்கி வடிவம் கொண்ட சுரசை அனுமனை அதட்டுகிறாள். பிளந்த வாயோடு வானுற ஓங்கி நின்று (எப்படி நிஜ அரக்கி இனிமேல் பயமுறுத்தப் போகிறாளோ அந்த மாதிரி பயங்கரமாய் நின்று கொண்டு), 'கொழுத்த குரங்கே, எனக்கு இரையாக வருகிறாயோ நீ?' என்று அதட்டுகிறாள் ஒரு கணம்.

சம்பாஷணை

அடுத்த கணத்தில் இன்னும் அதிசயமான கொடுமையுடன், 'வள்ளலே, கபகபவென்று தீயைப்போல் எரிக்கிறது பசி. நீயே வந்து கோரப் பற்களோடு கூடிய என் வாய்க்குள்ளே புகுந்து விடு, வேறு வழி யில்லையப்பா' என்று பரிகசிக்கிறாள்.

இந்தப் பரிகாசக் கொடுமையை இதோ பாருங்கள் :



[ஆயே - ஆகி
யே. அண்மினை
- நெருங்கி விட்
டாய். நிணம் -
மாமிசம்; கொழு
ப்பு. பிணங்கு -
வளைந்த. எயிற்
றின் - பற்களை
யுடைய. மற்று
இலை - வேறே இல்லை. வானின் -
வானத்திலே.]

'நீயே எனலாய
பசிப்பிணி தீர்த்தல்
செய்வாய்

ஆயே, விரைவு(று)எனை
அண்மினை, வண்மை
யாள !

நீயே இனிவந்(து)என்
நிணங்கொள் பிணங்(கு)எ-
யிற்றின்.

வாயே புகுவாய்,
வழிமற்றிலை வானின் !'
என்றாள்.

ஏற்கெனவே எங்கேயோ கிடைத்துச் செரித்துப் போன போஜனத்தின் குறிகளாய்க் கொழுப்பும் மாமிசத் துணுக்குகளும் காணப்படுகின்றனவாம், பற்களுக்கிடையே. (நிஜ ராட்சஸி மாதிரியே வேஷம், பாருங்கள் !) அந்தக் கோரப் பற்களோடு கூடிய வாயைத் திறந்து, 'வண்மையாள!' என்று அழைக்கிறாள்.

'வன்மையாள! மரியாதையாக வந்துவிடு வாய்க்குள்ளே!' என்று கொஞ்சுகிறது கொடுமை. ஆனால் இந்தப் பரிகாசத்தையாவது அந்த அதட்டலை யாவது கேட்டு மிரளப் போகிறானா வானரன்?

பரிகாசத்திற்குப் பரிகாசம் பரிமாறு கிறான்:

பெண்பால் ஒருநீ
 பசிப்பிழை ஒறுக்க
  நொந்தாய்;
உண்பாய் என(து)ஆக்
 கையையான்; உதவற்கு
  நேர்வல்,
விண்பா லவர்நாயகன்
 ஏவல் இழைத்து
  மீண்டால்,
நண்பால்!' எனச்சொல்லிய
 நல்லறி வாளன்
  நக்கான்.

[பீழை- துன்பம். ஒறுக்க - வருத்த. ஆக்கை - உடம்பு. உதவற்கு - உதவு வதற்கு. நேர்வல் - உடன்படுவேன். விண்பாலவர் — மேல் உலகத்தில் உள் ளவர்கள். நாயகன் — தலைவன்; (இங்கே) ராமன். நண்பு — நட்பு; சிநே கம். சொல்லிய — சொல்லி. நக் கான் — சிரித்தான்.]

'இரை என்னைத் தேடி வந்து விட் டதே!' என்பதை, 'விரைவுற்று எனை அண்மினை 'வண்மையாள!' என்றாள் அவள். வலிய வந்து உதவி வேண் டாதவரையும் வலியச் சென்று தேடிப் பிடித்து உதவி செய்யும் வண்மை முதன் மையானது, முதல் வள்ளலுக்கே உரியது. 'அத்தகைய முதல்வள்ளலே! என் பசிப்பிணி தீர்க்க இவ்வளவு தூரம் விரைந்து வந்த நீயே என் வாய்க்குள் புகுந்து விடு!' என்றாள். இதையும் தூக்கியடிக்கிறது அனுமன் பரிகாசம்.

'ஐயோ பாவம்! ஒரு பெண் பசியால் கஷ்டப்படுகிறாள் என்றால் உணவு கொடுக்க வேண்டியதுதான்' என்று மெள்ள ஆரம்பிக்கிறான். தயாராக இருந்த ஆகாரத்தை நீட்டுவது போல உடனே, 'உண்பாய் என் உடம்பை!' என்கிறான். அதற்கு முழுச் சம்மதம் என்கிறான்.

ஆனால் இந்த உடம்பு இப்போது ராம காரியத்திற்கல்லவா அர்ப்பணமாகி யிருக்கிறது? 'அக் காரியத்தை முடித்து நான் திரும்பி வந்தால் என் உடம்பை உனக்கு உண்ணக் கொடுப்பேன்! சிநேக முறையிலேயே அப்படிச் செய் வேன்; அப்போது நீ உன் பசி தீர்த் துக் கொள்ளலாம்!' என்று சொல்லி முடிக்கிறான்.

சகஜமாகப் பேசுவது போல் இப்ப டிப் பதில் சொல்லும் போதே இவனுக் குச் சிரிப்பு வந்துவிடுகிறது. வச்சிர தேக மல்லவா? — இவன் உணவாக விரும்பினாலும் அங்கே ஜீர்ண சக்தி வேணுமே!

அவளுக்கோ பொறுமை கூட இல்லை யாம். ஆத்திரமாக அவள், 'உன் உட ம்பை ருசி பார்த்து நன்றாய் மென்று தின்று என் பசியைப் போக்கிக் கொள் வேன்' என்று அவன்மேல் ஆணையிடு கிறாள். 'அப்படியானால் தின்று பார்!' என்று அலட்சியமாய்ச் சொல்லுகிறான் அனுமன்.

இப்படிச் சொல்லிக் கொண்டே அனுமன் என்ன செய்கிறான்? 'கால தாமதமாகிறதே' என்று தானும் ஆத் திரங் கொண்டு அவளை வதஞ் செய்யப் பார்க்கிறானா? மைநாகத்தைச் செய்தது போல் அடித்துத் தள்ளிவிட்டு அப்பால் போகத்தான் முயல்கிறானா?

அப்படி ஏதாவது செய்திருந்தால், அனுமனுக்குப் பலக் குறைவு இல்லா விட்டாலும் புத்தி சாமர்த்தியக் குறைவு இருக்கத்தான் செய்கிறது என்று தானே ருசுப்படும்?

சுரசைப்பெயர்ச் சிந்தை
 தூயாள்

நடத்தும் நாடக ஒத்திகை புரிய வில்லை இந்த நவவியாகரண பண்டித னுக்கு என்று தானே ஏற்படும்?



389. பரீட்சை தேறிய பண்டிதர்

'ராம காரியத்தை முடித்துக் கொண்டு மீண்டு வருகிறேனம்மா!' என்று நல்லறிவாளன் சொல்லவும் அரக்கி — அந்தப் பொல்லாத வேஷக் காரி — அதைக் காதில் வாங்கவே இல்லை. சிரிக்காத முகத்திலிருந்து முடுகி வந்த நல்லறிவாளனது சிரிப்பை யும் அந்த அரக்கி கவனித்ததாய்த் தெரிய வில்லை.

இருவர் ஆராய்ச்சி

'உன்னைக் கொன்று மென்று தின்று......' என்றெல்லாம் (பிராசம் போட்டதாகக் கம்பன் சொல்ல வில்லை.) அரக்கி அனுமன் மேல் ஆணை யிட்டுப் பேசுவதையும், அதற்கு அனுமன் ஆலோசித்துப் பதில் சொல்வதையும் கவிதை வாயிலாகவே கேட்போம் :

'காய்ந்(து),ஏழுல கங்களும்
காண,நின் யாக்கை
தன்னை
ஆய்ந்தெபசி தீர்வென்,நின்
ஆணை!'யென்(று) அன்னள்
சொன்னாள் ;
ஓர்ந்தானும், 'இகழ்ந்(து)ஒரு
வேன்,நின(து) ஊழில்
பேழ்வாய்
சேர்ந்தேகு கின்றேன்,
வலையாமெனில் தின்னி!'
யென்றான்.

[காய்ந்து — கோபித்துக் கொண்டு. ஏழுலகங்களும் காண—ஏழாகச் சொல் லப்படும் எல்லா உலகங்களும் சாட்சி யாக. நின் யாக்கை தன்னை — உன் உடம்பை. ஆய்ந்து—ஆராய்ந்து: (இங்கே) ருசி பார்த்து மென்று தின்று. பசி தீர் வென் — பசி தீர்த்துக் கொள்வேன். நின் ஆணை — உன்மேல் ஆணை. அன்னள் — அந்த அரக்கி வேடத்திலிருக்கும் சுரசை. ஓர்ந்தானும் — அவள் சொன் னதை ஆராய்ந்து உண்மை நிலையை ஊகித்துக் கொண்ட அனுமனும். இகழ்ந்து ஒருவேன் — (இவ்வளவு பெரிய 'மனுஷி'யாகிய உன்னை) இகழ்ந்து நான் தாண்டி அப்பால் போய்விட மாட் டேன். ஊழில் பேழ் வாய் — முறைப படி யில்லாமல் மிகவும் கோரமாகவுள்ள பிளந்த வாய். சேர்ந்து ஏகுகின்றேன் — புகுந்து போகின்றேன். வலை ஆம் எனில் — வல்லமை யுடையவளானால். தின்னி—தின்பாய்.]

சுரசையை உற்று நோக்கிய வண்ணம் அவள் சொல்வதை யெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறான். முகத்தை நோக்

கிய வண்ணம், வார்த்தைகளை ஆராய்ச்சிச் சாணையில் பிடிக்கிறான். 'நடப்பா, நடிப்பா?' என்ற ஐயப்பாடும் எழுகின்றது.

'அம்மா, உன் வாய் வழியாகவே போகிறேன். ஜீர்ண சக்தி இருந்தால் ஜீர்ணமாக்கிக் கொள். என் சக்தி உன் ஜீர்ண சக்திக்கு மேலிருந்தால், போய் ராமகாரியம் பார்த்துக் கொள்கிறேன்' என்கிறான் அனுமன்.

'கொல்லக் கூடாது, வெல்லத்தான் வேண்டும். நல்லவள் போலிருக்கிறது. வேஷக்காரியானாலும் மோசக்காரியில்லை' என்று மின்வெட்டுகின்றன கருத்துக்கள் அனுமனது சித்த ஆகாசத்திலே. ஏற்கெனவே அரக்கியென்று எண்ணிய எண்ணம் தவறென்று தெரிகிறது.

சரி, இப்போது என்ன செய்கிறாள் இந்த அரக்கி? அனுமன் என்ன செய்கிறான்?

அக்காலை, அரக்கியும்
  அண்டம் அனந்தம்
    ஆகப்
புக்கால் நிறையாத
  புழைப்பெரு வாய்
    திறந்து,
விக்காது விழுங்க
  நின்றாள்; அது நோக்கி
    வீரன்
திக்காரவள் வாய்சிறி—
  தாம்வகை சேணில்
    நீண்டான்.

[அக்காலை — அப்போது. அண்டம் அனந்தமாகப் புக்கால்—அநேக அண்டங்கள் ஒரு சேர வந்து புகுந்தாலும். புழைப் பெருவாய்— மிகப் பெரிய குகை போன்ற வாயைத் திறந்துகொண்டு. விக்காது — அதாவது, தொண்டையில் விக்கிக் கொள்ளாமல். திக்குஆர்—(அனுமன் செல்ல வேண்டிய) தெற்குத் திசை யெல்லாம் பரவியது போலத் தோன்றிய. சிறிதாம் வகை — தன் உருவத்திற்கு முன் சிறிதாய்த் தோன்றும்படி. சேணில் நீண்டான் —ஆகாயத்தில் நீண்டு வளர்ந்தான்.]





இருவர் போட்டி

அவள் வாயிலே புகுவதற்கு இசைந்தானல்லவா அனுமன்? அப்போது அந்த வாயைக் காட்டிலும் தன் உருவத்தைப் பெரிதாக்கிக் கொண்டே தான் அப்படிச் சம்மதம் தெரிவித்தானாம்.

'ஜெரிக்குமானால் தின்று பார்' என்று சொன்ன அந்தப் பேருருவத்தைப் பார்த்ததும் அரக்கிக்கு, 'தொண்டை விக்காது விழுங்க முடியுமா?' என்று தோன்றியது. எனவே மேலும் மேலும் வாயை அகல அகல விரிக்கத் தொடங்கினாள். அனுமனும் தன் பேருருவத்தை மேலும் மேலும் வளரச் செய்து கொண்டே போனான்.

இப்படி ஒரு சாமர்த்தியப் போட்டி நடக்கலாயிற்று இருவருக்கு மிடையே. உடல் வலிப் பரீட்சை மட்டுமல்ல, புத்தி சாமர்த்தியப் பரீட்சையும் தான். இந்தப் போட்டிப் பரீட்சையில் அனுமன் வெற்றி பெறுகின்றான், இதற்கு ஏற்பாடு செய்திருந்த தேவர்களும் ஒரு முகமாய் ஒப்புக் கொள்ளும்படி.

பளிச்சென்று தன் உடம்பை மிகவும் சிறிதாக்கச் சுருக்கிக் கொண்டு, மடமடவென்று அந்த வாய்க் குகைக்குள் நுழைந்து உடனே வெளியே வந்து விடுகிறானாம் :

நீண்டான், உடனே
சுருங்கா, நிமிர்வாள்
வயிற்றின்
ஊன்தான் எனஉற்(று),
ஒருயிர்ப்(பு) உயிராது
முன்னர்
மீண்டான் ; அதுகண்டனர்
விண்ணுறை வோர்கள்,
'எம்மை
ஆண்டான் இவன் !' என்(று)
அலர்தூய் நெடி(து) ஆசி
சொன்னார்.

[நீண்டான் — அப்படி நீண்டு வளர்ந்து கொண்டிருந்த அனுமன். சுருங்கா — சுருங்கி. நிமிர்வாள் — நிமிர்ந்து அகல அகல விரிந்து கொண்டிருக்கும் வாயையுடைய சுரசையின். வயிற்றின் ஊன் தான் — வயிற்றுக்கு உணவே ஆகிவிட்டான். என உற்று — என்று கண்டோர் நினைக்குமாறு அந்த வாய்க்குள்ளே புகுந்து. ஓர் உயிர்ப்பு உயிராத

முன்னர்—மூச்சு விடுவதற்கு முன்னமே; அதாவது, அவ்வளவு மிக விரைவாக. விண் உறைவோர்கள் — வானுலக வாசிகளான தேவர்கள். எம்மை ஆண்டான் இவன் — இவன் எங்களை ஆட்கொண்டவனாவான்; அதர்மத்தை வென்று எங்களை ஆபத்திலிருந்து விடுவிப்பான்.]

விஜய சௌந்தரியம்

'மூச்சு விடும் முன்னே முந்நூறும் நானூறுமாகப் பாடிவிடுவேன்' என்று ஒரு போடு போட்டாராம் ஆசு ஒருவர், கவிராயர். அனுமனோ மூச்சு விடு முன்னே ஒரு செயற் கருஞ்செயல் செய்து விடுகிறான்.

சுரசையும் தன் உண்மை வடிவத்துடன் அனுமனை வாழ்த்தி ஆசி சொல்லுகிறாள். இந்த ஆசிகளை அணிகலமாகப் புனைந்து போகிறானும் அனுமன் :

மின்மேல்படர் நோன்மைய—
னுய்உடல் விங்கி
நீங்கத்,
தன்மேனிய ளாய்அவள்
தாயினும் அன்பு
தாழ,
'என்,மேல் முடியாதன?'
என்(று)இனி(து) ஏத்தி
நின்றாள் ;
பொன்மே னியனும்
நெடி(து)ஆசி புனைந்து
போனான்,

[மின்மேல் படர் நோன்மையனாய்— மின்னலினும் அதிகமாகப் படர்கின்ற ஆற்றலை உடையவனாகி. உடல் வீங்கி நீங்க— திடீரென்று சுருங்கிய உடலைச் சுரசையின் வாய்க்கு வெளியே கொணர்ந்து பளிச்சென்று மறுபடியும் உடலை முன் போல் வீங்கச் செய்து நீக்கி விடவும். தன் மேனியளாய் — தன்னுடைய சொந்த உருவத்தை மறுபடியும் மேற்கொண்டு அரக்கி வடிவத்தை ஒழித்தவளாய். தாயினும் அன்பு தாழ — பெற்ற தாயைக் காட்டிலும் அன்பு அதிகமாக. என், மேல் முடியாதன — என்னதான் இனி மேல் முடியாதன உனக்கு; உன்னால் முடிக்கக் கூடாத செய்கைகள் எவை. இனிது ஏத்தி நின்றாள்— இனிமையாகப் புகழ்ந்து நின்றாள்.]

'சுரசைப் பெயர்ச் சிந்தை தூயாள்' என்பதில் அதிமுக்கியமான பிற்பகுதியை எவ்வளவு நன்றாக உய்த்துணர்ந்து விட்டான், குறிப்பறிதலில் வல்லவனான அனுமன்! ஆம், சுரசைப் பெயர் தெரியாது. 'சிந்தை தூயாள்' என்பதைக் கண்டு கொண்டான். ஆகவே வதமாவது அநாவசிய ஹிம்ஸையாவது செய்யாமல், தேவ பரீட்சையில் தேர்ந்து அப்பால் போகிறான்.

பின்னே ஒரு கொடிய அரக்கி தோன்றப் போகிறாள். அவளால் நேரப்போகும் ஆபத்திலிருந்து அனுமன் தப்பிப் பிழைக்கவேண்டுமே. இதற்காகச் செய்த பரீட்சைதான், ஒத்திகைதான் சுரசைப் பெயராள் செய்த சூழ்ச்சி.


அந்த நிஜ அரக்கி எப்படிப் பயமுறுத்தக் கூடுமோ அப்படியே போலி அரக்கியும் அனுமனைப் பயமுறுத்திப் பார்த்தாள். இந்த ஒத்திகையின் பயனாக அந்தப் பயங்கர நாடகத்திலே அனுமன் வெற்றி பெற நடித்து இலங்கைக்கு க்ஷேமமாய்ப் போய்வரவேண்டும் என்பது சுரசையின் தூய உள்ளக் குறிப்பு.

விஜயசுந்தரனாகிய அனுமன் ஆகாச யாத்திரையைத் தொடர்ந்து செய்கிறான், கின்னரர் பாடத் தேவ மாதர் ஆட, வானவீதியில் முனிவர்கள் வேத கோஷம் செய்ய!

தென்றலும் விருந்து செய்கிறதாம். மைநாகத்தின் விருந்தைப் போல் மறுத்துத் தள்ள முடியாத விருந்துகளல்லவா?

தேவலோகத்துத் தென்றலும் அந்தத் தெய்வமலர்களின் மணத்தோடு வந்து வீசுகிறதாம் அனுமன் முகத்திலே. விசிறி கொண்டு சுகமாய் வீசுவதுபோல வீசுகிறதாம், முகத்திலுள்ள வேர்வைத் துளிகள் சிதைய.

வீணாகானமும் செவி — விருந்து செய்கிறதாம் வித்யாதர லோகத்திலிருந்து வந்து.



390. கலை விநோதமும் ஆராய்ச்சி வக்கிரமும்

'அனுமன் யார்?' எனத் திடீரென்று ஒரு கேள்வி போட்டார் ஒரு போலி ஆராய்ச்சிக்காரர். சரித்திரத்தின் பெயரால் மகாகவிகளின் கற்பனைகளையும் ராமாயணத்தின் புதை பொருளையும் 'மொஹெஞ்சதரோ' புதை பொருள்களைப்போல் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் மகா தீரர்!

'அனுமன் வெள்ளைக்காரன்! ஸ்ரீமான் ஆரியருமில்லை, திருவாளர் திராவிடருமில்லை திருவாலர் அனுமார்!' என்று விகடமாக விடையளித்தார் ராமாயண மாணாக்கர் ஒருவர்.

வெண்மேனி — பொன்மேனி

விகடம் உண்மையுங்கூட. ராமாயண வானரர்களைக் கம்பனும் வெள்ளை வானரர்களாகவே குறிப்பிடுகிறான்.

கயிலையங் கிரியும்
ஒத்தான்

என்று அனுமனை வருணிக்கிறானல்லவா?

ஆனால் பிரம்மசாரியும் மகாபண்டிதனுமாகிய அனுமனுடைய மகாதேஜஸ், பொன் மலையாகிய மகாமேருவுடனும் ஒப்பிடத் தூண்டுகிறது கவியுள்ளத்தை.

இதே கவியுள்ளம், சுரசையின் பரீட்சையில் முற்றும் தேர்ந்து அவள் தாயன்புடன் தந்த ஆசிகளை அணிந்து அப்பால் போகும் அனுமனின் போக்கை,

பொன்மேனியனும்
நெடி(து)ஆசி புனைந்து
போனான்

என்று வருணித்திருப்பது எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது!

ஆடல் பாடல் — புகழ்மாலை

இப்போது வான வீதி கீதமயமாகிறது. கின்னரர்கள் என்ற தேவ வகுப்பினர் கின்னரம் என்ற வாத்தியமும் கையுமாய் அனுமன் செல்லுகிற வான வீதியில் இசை வெள்ளத்தை அள்ளி அள்ளித் தெளிக்கிறார்கள்.

அதே வான வீதியில் அந்தப் பலவகையான கீத பேதங்களுக்கு இசைய ஆடுகிறார்கள் தேவமாதர்கள்.

அவ்வழியே சென்ற பூதகணங்கள் (பூதகணநாதனை சிவபெருமானின் பரிவாரங்கள்) அனுமனைத் தொடர்ந்து புகழ்மாலைகள் சூட்டுகின்றனவாம்.

முனிவர்கள் வேதபாராயணம் செய்து கொண்டே அனுமனுக்கு மங்களம்



உண்டாக வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் சிறிது தூரம் தொடர்ந்து போகிறார்களாம்.

கலை விருந்து—இயற்கை விருந்து

இத்தகைய கலை விருந்துகளுடன், தென்றற்காற்றும் மெல்ல வந்து வீசி இளைப்பைப் போக்கி இனிமை செய்ய, இந்த விருந்தையும் அனுபவித்துக் கொண்டே போகிறான் அனுமன் :

கீதங்கள் இசைத்தனர்
கின்னரர் ; கீதம்
நின்ற
பேதங்கள் இயம்பினர்
பேதையர் ஆடல் ;
பின்னர்ப்
பூதங்கள் தொடர்ந்து
புகழ்ந்தன; பூசு-
ரேசர்
வேதங்கள் இயம்பினர் ;
தென்றல் விருந்து
செய்ய.

[கீதம் நின்ற பேதங்கள் - கீதங்களிலுள்ள பல வகையான பேதங்களை. இயம்பினர் ஆடல் - ஆடல்களில் சொன்னார்கள் ; (பலவகையான கீதங்களையும் பொருள்களையும் பாவங்களையும்) ஆடல்களில் விளக்கக் காட்டினார்கள், பேதையர் - பெண்கள்; (இங்கே) தேவ மாதர்கள். பின்னர் - (அனுமனது) பின்புறத்திலே. பூதங்கள் - சிவ கணங்களான பூத கணங்கள். பூசுரேசர்- பூசுர ஈசர் ; பூமிக்குத் தேவர்கள் போல விளங்கும் முனி சிரேஷ்டர்கள்.]

தென்றலை அனுபவித்துக் கொண்டே மெய்ம்மறந்து போகிறோம் சில சமயங்களில். 'என்ன, பூலோகத்தில் தான் இருக்கிறோமா? தேவலோகத்திற்கே வந்து விட்டோமா?' என்று கூடத் தோன்றுகிறது.

அந்தி மயங்கும் அந்த வேளையில் உள்ளமும் மயங்குகிறது. மாலைச் செவ்வானத்திலே விந்தை விந்தையான காட்சிகளை நோக்கிய வண்ணம், தேவலோகக் காட்சிகளை அனுபவிப்பது போன்ற வசீகர உணர்ச்சியும் பெறுகின்றோம். அருகேயுள்ள பூஞ்சோலையும் கற்பகச் சோலை ஆகிறது. அமுதமாய்ப் பருகும் காட்சியையும், நுகரும் தென்றலையும் தேவாமிர்தம் என்றாலும் மிகையாகுமா?

இத்தகைய அனுபவத்தைக் கம்பனும் அடைந்து தானே இருக்க வேண்டும், நம்மைக்காட்டிலும் எவ்வளவோ அதிகமாக—அதிகமாக ! கம்பன், ஷேக்ஸ்பியர் போன்ற மகாகவிகள் இயற்கையை அனுபவிக்கும் திறனே அலாதி.

அத்தகைய அனுபவங்களை உள்மனத்திலே கொண்டு கவிஞன், அனுமனுக்குக் கிடைக்கும் தென்றல் விருந்தையும் இசை விருந்தையும் நம்மையும் நுகரச் செய்கிறானே ஓர் இசைச் சித்திரமாக, இந்தக் கலையும் அலாதிதானே :

மந்தாரம் உந்து
மகரந்தம் மணந்த
வாடை,
செந்தா மரைவாள்

முகத்தில் செறிவேர்
சிதைப்பத்,
தந்தாம் உலகத்
திடைவிஞ்சையர் பாணி
தள்ளும்
கந்தார விணைக்களி
செஞ்செவிக் காது
நுங்க—

[மந்தாரம்—(இங்கே) தேவலோகத்து மந்தார மலர்களின் மணம். உந்து—வீசுகிற. மகரந்தம்—மகரந்தப் பொடி. வாடை—(இங்கே) தென்றல். வாள்முகம்—ஒளியுள்ள முகம். செறி—அதிகமாய்த் தோன்றிய. வேர்—வேர்வை. சிதைப்ப—சிதைக்க. தந்தாம்—தங்கள் தங்களுடைய. விஞ்சையர்—வித்யாதரர், பாணி—தாளம். தள்ளும்—காலம் தள்ளிப் பாடும். கந்தாரம்—காந்தாரம் என்னும் இசைப் பாட்டு. களி—மது. செஞ்செவிக் காது—செம்மையாகப் பண்பட்ட காது. நுங்க—ஆவலோடு பருக.]

வீரன்—ரஸிகன்

தெய்வ மலர்களின் மணம் சுமந்த தென்றற் காற்றுடன் வீணாகானத்தையும் ரஸித்துக்கொண்டே போகிறானும், ஒரே நோக்கத்துடன். படுவேகத்திலே போய்க் கொண்டிருக்கும் இந்த நிலையிலும் இந்த மகா பண்டித வீரனின் ரஸிகத் தன்மைக்குப் பங்கம் ஏற்படவில்லை.

ஒரு பழைய கிரேக்க வீரன்—கிரேக்கர்களின் இதிகாசப் பெரு வீரனான யுலிஸிஸ்—ஊரை நோக்கித் திரும்பிப் போகிறான், கடல் மார்க்கமாக. அனுமனைப் போல் வால்வீசிப் பாய்ந்து போகவில்லை, கப்பலில்தான் போகிறான். (இது ஐரோப்பிய மனோபாவத்திற்கும், உயர்வு நவிற்சியோடு அதிகமாய் ஒட்டிப் பழகும் நம் இந்திய மனோபாவத்திற்குமுள்ள ஒரு வேற்றுமை என்றும் கருதலாம்.)



அந்தக் கடல் வழியிலே கடற் கன்னிகைகளின் கீதத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்து விடாமல் செல்ல வேண்டுமே என்பதற்காகக் காதை அடைத்துக் கொண்டு போகுமாறு தன்னைச் சேர்ந்தவர்களை எவினானும்.

சமீபத்தில் ரஷ்யப் புரட்சித் தலைவனான லெனின், தன் உள்ளத்திலுள்ள

புரட்சி—வேகம் குன்றாமலிருக்க வேண்டுமே என்று, சங்கீதம் கேட்டதும் காதைப் பொத்திக் கொள்வானாம்.

ஏகாக்ர சித்தத்திலும் லட்சிய ஈடுபாட்டிலும் யாருக்கும் சிறிதும் குறையாத புரட்சி வீரன் தான் அனுமனாம். வீணா கானத்தைப் பருகிக் கொண்டே மேலும் உத்ஸாகமாய்ச் செல்லுகிறான் லட்சியத்தை நோக்கி. வாழ்க்கையில் லட்சியத்தைத் துரிதப் படுத்துவதற்குக் கலைகளும் சிறந்த சாதனம் அல்லவா?

சமுத்ரப் பிரசவம்

இப்படிப் போகும்போது தான் மூன்றாவது இடையூறும் ஏற்படுகிறது.

பொங்கிக் கொண்டிருக்கிறது தென் சமுத்திரம் அனுமனுக்கு எதிரே. ஓசையும் கேட்கிறது, அது என்ன வேதனைக் குரல்?

பிரசவ வேதனையை யல்லவா அனுபவிக்கிறது? 'மலைப் பிரசவம்' என்பர் ஆங்கிலத்திலே. ஆஹா, சமுத்திரப் பிரசவம் அதோ!

சமுத்திரம் வேறொரு சமுத்திரத்தைப் பிரசவித்து விட்டது போலக் காண்கிறது. அதி பயங்கரமான கருநிறம் வாய்ந்த புதுமைக் கடல் ஒன்று பழைய கடலுக்கு மேலே தோன்றுகிறது:

வெங்கார் நிறப்புணரி
  வேறேயும் ஒன்று,
பொங்கார் கலிப்புனல்
  தரப்பொலிவ தேபோல்
'இங்(கு) ஆர் கடந்தீர் என்னா?'
  என்று, எழுந்தாள்
அங்கார தாரை, பிறி(து)
  ஆலாலம் அன்னாள்.

[வெங்கார் நிறப் புணரி — அச்சம் தரும் கொடிய கருநிறமான சமுத்திரம். பொங்கு ஆர்கலிப் புனல் — பொங்குகிற சமுத்திர நீர். தர—பெற்று விட, இங்கு ஆர் கடந்தீர் — இங்கு யார் கடந்து போகிறீர். என்னா — என்று கோஷித்துக் கொண்டு. பிறிது — வேறோர், ஆலாலம் — ஆலகால விஷம்.]

அரக்கியும் ஆராய்ச்சி விநோதமும்

ஆகாசத்தில் தனக்கு நேரே செல்லுகிற எந்தப் பிராணியின் நிழலையும் இவளால் பிடித்துக் கொள்ள முடியுமாம். நிழலைப் பிடித்த மாத்திரத்தில் பிராணியும் பிடிபடுமாம். நிழல் அல்லது சாயையைக் கிரகித்துப் பிராணியையும் இழுத்துக் கொள்வதால், 'சாயாக்கிராகிணி' என்று பெயர் இந்த அரக்கிக்கு.

இவளிருப்பிடத்தில் கடலுக்கு மேலே செல்லக்கூடிய எந்தப் பிராணியும் (பறவையோ, ரிஷியோ) இவளுக்கு இரைதான்! இந்த ஆபத்தை அறிந்து கொண்ட எவர் தான் அந்தப் பக்கமாக வான வீதியில் செல்லத் துணிவர்? எனவே கடும் பசி இவளுக்கு, அனுமன் இந்தப் பக்கமாய் வான வீதியிலே தோன்றிய தருணம்.

பெரிய நிழலைக் கடலிலே காண்கிறாள். 'பெரும் பசிக்குச் சரியான உணவு கிடைத்து விட்டது' என மகிழ்கிறாள். நிழலைப் பிடித்து அனுமனையும் பிடிக்க அந்த வேகப் போக்கை அதி வேகமாய்த் தடைப்படுத்தி விடுகிறாள். அதட்டிக் கொண்டே கடலிலிருந்து வெளிப்படுகிறாள்.

இந்த அங்காரதாரையை ராவணனுக்குக் கடல்—அரணிலே ஒரு காவற்காரி யென்றும் கூறுவதுண்டு. இவள் இருக்குமிடத்தைச் சுற்றி ஒரு காதவழி தூரத்திற்கு எந்தப் பிராணியும் வரமுடியாதாம்.

'புராண மரியாதை'களை மறந்து ராவணாதி ராட்சஸர்களையும் அனுமன் முதலான வானரர்களையும் திராவிடர்களென்று மயங்கும் ஆராய்ச்சி விநோதர் ஒருவர், அங்காரதாரை யென்ற அரக்கியை ஒரு யந்திரம் என்றே கருதுவாராயினர்!

இராவணேச்வரன் தன் கடல்—அரணிலே காவலாக நிழலையும் பிடித்துக் கொள்ளும் ஒரு யந்திரத்தை ஸ்தாபித்திருந்தானாம். என்ன விஞ்ஞான மூளை, முன்னேற்றம், பாருங்கள்!